# பாரத மணி

"உழவுக்கும் தொழிலுக்கும் வந்தனை செய்வோம்"—பாரதி


ஆசிரியர் : கே. எஸ். வேங்கடரமணி.

மாலை 1 | ஞாயிறு 15-1-39 வெகுதான்யஞூ தைமீ 2வ | முத்து 16

## பொருள் அடக்கம்


| விஷயம் | | பக்கம் |
|---|---|---|
| 1. போங்கல் | .... | 394 |
| 2. வரிவஜா ஏமாற்றம் | ... | 395 |
| 3. குறிப்பு | ... | 396 |
| 4. போகிற போக்கில் | ... | 398 |
| 5. வார நடப்பு | ... | 400 |
| 6. சங்கீத வித்வத்சபை | ... | 401 |
| 7. திண்ணையில் (ராவ் சாகேப் கே. சுப்ரமண்யம்) | .... | 403 |
| 8. இலங்கையில் நில உடைமை (இலங்கையர்கோன்) | ... | 407 |
| 9. பொங்கல் வழிபாடு (ஸ்ரீ. ந. பிச்சமூர்த்தி) | ... | 409 |
| 10. பொங்கல் காட்சிகள் (ஸ்ரீ. கு. பா. வேங்கடாசலம்) | ... | 410 |
| 11. பொங்கலும் கிராமமும் (ஸ்ரீ. எஸ். சத்தியமூர்த்தி) | ... | 411 |
| 12. தைக்கதிர் (ஸ்ரீ. கி. வா. ஜகன்னாதன்) | ... | 412 |
| 13. "வெள்ளைக் காரச்சி" (ஸ்ரீ. கு. ப. ராஜகோபாலன்) | ... | 414 |
| 14. விமர்சனம் | ... | 415 |
| 15. பொங்கலுக்கு மறுநாள் (ஸ்ரீ. டி. ஏ. கிருஷ்ணமூர்த்தி) | ... | 417 |
| 16. மாரியப்பன் மருமகன் (ஸ்ரீ. டி. ஆர் பந்துலு) | ... | 420 |
| 17. சாமா சாஸ்திரிகள் (டாக்டர் டி. எஸ். ரமணி) | ... | 423 |
| 18. மனமாற்றம் ("வஸந்தன்") | ... | 425 |
| 19. வலை வீச்சு | ... | 428 |
| 20. துணுக்குகள் | ... | 431 |


"பாரத மணி" யில் வெளியாகும் கட்டுரைகள், கதைகளில் குறிப்பிடும் பெயர்கள் எல்லாம் கற்பனைப் பெயர்கள். ஒருவரையும் குறிப்பிடுவனவல்ல.




# பொங்கல்

தமிழ் நாட்டில் பொங்கலன்று ஒவ்வொரு வீட்டிலும் பால் பானையும் மக்கள் ஹிருதயமும் பொங்கும். ஆமாம்! விளைச்சலற்றுப் போன இந்த வருஷம் கூட தமிழ் மக்கள் பொங்கல் வைப்பார்கள். வறுமை அவர்களை அன்று வருத்தாது; நோய் அன்று அவர்களை அண்டாது.

* * *

சாதுமிரண்டால் காடு கொள்ளாது என்பார்கள்; வாழ்க்கையில் நிறைவு என்பதையே பல நூற்றாண்டுகளாகக் கண்டறியாமல் மறந்துபோன குடியானவன் பொங்கலன்று நிறைவைக் காணுகிறான். பானையிலும் தன் குடும்பத்தின் உள்ளத்திலும், காடு கொள்ளாத இன்பம் பெறுகிறான்.

* * *

கரும்பும் செந்நெல்லும் நமது நாட்டின் நிறைவிற்கு அடையாளங்கள். இக்ஷுச்சாயா (கரும்பின் நிழல்) என்கிறார் காளிதாஸன். அப்படி இங்கு கரும்பு மண்டின காலமும் உண்டு. இன்று சத்தற்ற பூமியில் கரும்பு பேய்க் கரும்பு போல இருக்கிறது. நெல்லும் இன்று செந்நல் அல்ல.

ஆனாலும் நாம் நமது வளமையை மறக்கவில்லை; சந்தோஷத்தை மறக்கவில்லை; வாழ்க்கையை மறக்கவில்லை.

* * *

அந்தப் பொங்கல் பானையில் வருவதற்கு நம்முடன் நிலத்தில் பாடுபட்ட மாடுகளையும் நாம் மறக்கவில்லை; நம்முடைய பொங்கலையும் மகிழ்ச்சியையும் அவற்றுடன் நாம் பங்கு போட்டுக் கொள்ளுகிறோம்.

* * *

பூமியை விண்டு அதன் மார்பிலிருந்து மனிதன் உயிர் அளிக்கும் உணவை எடுத்தபொழுது அவனுக்குத் துணையாக நின்றது மாடு! கல்பக விருக்ஷத்தைத் தோற்றுவிக்க உதவியதும் மாடு; காமதேனுவாக நின்றதும் மாடு. நமது குடியானவர்களுக்கு பெரும் பொங்கலைக் காட்டிலும் மாட்டுப் பொங்கல்தான் ரொம்ப முக்கியம். மாடு அவனுடைய வலது கையல்லவா?

* * *

குடியானவனும் அவனுடைய மாடும் நன்றாக இருக்க வேண்டும்! அவன் நன்றாய் இருந்தால் நாட்டிற்குக் குறைவு கிடையாது. ஏர் பிடித்த அவன் கை ஓங்கட்டும்! அதுதான் பாரதமணியின் பிரார்த்தனை சூரிய நாராயணனுக்கு!

# வரி வஜா ஏமாற்றம்

இந்த வருஷம் தமிழ்நாட்டில் பல இடங்களில் சாவி ஏற்பட்டுவிட்டது. ராஜதானியில் சுமார் பத்து ஜில்லாக்களில் விளைச்சல் இல்லாமல் போய்விட்டது. அதிலும் சேலம் ஜில்லா ரொம்ப மோசம் என்று கேள்விப்படுகிறோம்.

குடிகள் சாவி வந்துவிட்டதே என்று ஏங்குவார்கள்; ஏனென்றால் தற்காலம் நிர்வாக முறைப்படி நிலவரி வஜா செய்வதில் குடிகளுக்கு அவ்வளவாக உபயோகமில்லை. வஜாப்பட்டியென்று கிராமக் கணக்குப்பிள்ளை இரவும் பகலுமாக உட்கார்ந்து ஒரு ஸ்தலவாரி கணக்கைத் தயார் செய்கிறான். அதில் ரெவினியூ இன்ஸ்பெக்டரும் தாசில்தாரும் மேற்பார்வை செய்து மனதிற்குத் தோன்றியபடி யெல்லாம் "சாவி" யென்றோ, "மணிப்பிடி" யென்றோ, "விளைச்சல்" என்றோ, "3 அணு மகசூல்" என்றோ எழுதி டிப்டி கலெக்டருக்கு அனுப்பி விடுகிறார்கள். டிப்டி கலெக்டர் போர்டின் நிரந்தர உத்தரவுகளில் கண்ட விதிகளின்படி தீர்வை போடுகிறார். "நஞ்சை புஞ்சைதீர்வைக்கு வித்தியாசம்" முதலிய பல ரகமான தீர்வை விதிப்புகள் இருக்கின்றன. அதன்படி கணக்குப்பிள்ளை உட்கார்ந்து கொண்டு 5-2 என்ற கிராமக் கணக்கைத் தயார் செய்கிறான். அதில் நபர்வாரி ஏற்படும் வஜாத் தொகை மொத்தம் தெரியும். இந்தக் கணக்கு அநேகமாக ஜமாபந்தி சமயத்தில்தான் தயாராகி முடியும்: அதாவது மேமாதம். அதற்குள்நாலு கிஸ்திவசூலும் ஆகிவிடும். ஜமாபந்திக்குள் "பேபாக்கி"யாக வசூல் செய்துவிடவேண்டும் என்று முனிசிபுக்குக் கடுமையாக உத்தரவுகள் பிறக்கும். அவன் குடிகளை நெருக்கி, மாடுகளையும் பாத்திரங்களையும் ஜப்திசெய்து பணத்தைக் கறந்துவிடுகிறான். வஜா ஆனதொகை மே மாதத்திற்குப் பிறகுதான் தெரியும். அந்தத்தொகையாவது விவசாயி கைக்குப்போய்ச் சேருகிறதா? கிடையவேக் கிடையாது என்பது கிராமத்தில் வசிப்போர்கள் எல்லோரும் அறிந்த விஷயம்.

இந்த நிலைமையில் விவசாயிகளுக்கு ஏதாவது கதிமோக்ஷ முண்டா? சர்க்கார் இதை எப்படி சீர்திருத்தப் போகிறார்கள்? வரிவஜாக் கணக்குத் தயாரிக்கும் தத்துவத்தைப்பற்றி நாம் இங்கு ஆராய்ச்சி செய்யவில்லை. அது ஒரு பெரும் அநீதி. வஜாசெய்வது விவசாயிக்கு உண்மையாக உபயோகப்படுகிறதா என்பதை சர்க்கார் கவனிக்கவேண்டியது அவசியம். வஜா ஆகும் தொகையை முனிசீபும் கணக்குப் பிள்ளையும் தங்கள் சிரமத்திற்காகப் பங்கு போட்டுக்கொண்டு போய்விட்டால், இவ்வளவு ஆடம்பரத்துடன் வஜாக் கணக்கு ஒன்று தயாரிப்பானேன்? மலையைக் கெல்லி எலியைப் பிடிப்பது என்பார்கள். அந்த வசனம் இந்த வேலைக்குத்தான் நன்றாகப் பொருந்தும்.

முதலில், சர்க்கார் கிஸ்தியைப் பூராவும் நான்கு வாய்தாக்களுக்குள் வசூல் செய்வதை உடனே நிறுத்திவைக்கவேண்டும். கிஸ்தியை பனிரண்டு மாதங்களில் கட்டலாம் என்றுவது உத்தரவு போடவேண்டும். வஜா விஷயத்தில் தாராளமாக இருக்கும்படியும் மகசூல் மதிப்பை சரியாகப் போடும்படியும் ஜில்லா அதிகாரிகளுக்கு அறிக்கை அனுப்பவேண்டும். அபராதத் தண்ணீர்த் தீர்வையையுங்கூட ரத்து செய்யவேண்டும். தாசில்தாரும் டிப்டி கலெக்டரும் சேர்ந்து 'சாவி அஜ்மாஷை' விரிவாகச் செய்யவேண்டும். "மாமூல் தரிசுகள்" விஷயத்தில் பழைய கணக்குகளை பார்ப்பதுமட்டுமின்றி விசேஷ விசாரணையும் செய்வது அவசியம். மழைக் கணக்கை அதிகமாகப் பாராட்டாமல் கணக்கு எடுக்கவேண்டும்.

இதெல்லாம் ரயத்துவாரிக் கிராமங்களின் தொல்லைகள். இனும் கிராமங்களின் பாடு என்ன? இனும் நிலங்களுக்கு வஜா கிடையாது. அவற்றின் வரி இலவச விகிதமாம்! சாவியானாலும் சரி, சாகுபடியே செய்யமுடியாமற் போனாலும் சரி, வரி யென்னமோ கட்டித்தான் ஆகவேண்டும். இனும்தாரோ ஜமீந்தாரோ மராமத்து செய்யாமல் நீர்ப்பாசன வசதிகுறைந்து நிலம் தரிசு கிடந்தாலும் வரிதான்! அவற்றிற்கு விமோசனம் எப்பொழுதோ?

அயன் கிராமங்களில் வரிவஜா விதிகளை பூராவும் மாறவேண்டும். வரிவஜா என்று தற்காலம் நடக்கும் வேடிக்கை நடக்கவேண்டியதில்லை. உண்மையாகவே குடிகளுக்கு அனுகூலம் ஏற்படும்படியான வழிகளைத் தேடுவது மிகவும் அவசியம்.

குறிப்பு

# விஷம் தலைக்கேறுகிறது

வகுப்பு வாத விஷம் ஸ்ரீ. ஜின்னாவின் தலைக்கு ஏறிவிட்டது. முதலில் காங்கிரஸ்காரராயும் பிறகு மிதவாதமாகவும் இருந்தவர் இப்பொழுது வெறும் வகுப்பு வாதியாகி விட்டார். அந்த வெறியில் வாய்க்கு வந்ததை யெல்லாம் பேசுகிறார். காங்கிரஸின் பலம் வலுக்க வலுக்க அவர் வெறி அதிகமாகிறது; இன்னும் இரண்டு மாகாணங்களில் மட்டும் தான் வகுப்புவாதப் பேய் தலைசுற்றி ஆடுவதற்கு இடமிருக்கிறது என்று காணும் பொழுது ஸ்ரீ ஜின்னாவின் கோபமும் அகங்காரமும் கட்டுமீறி வசையாக வெளிவருகின்றன.

காங்கிரஸ் சர்க்கார்கள் சிறு பான்மை வகுப்பினரை கொடுங்கோலுக்கு உள்ளாக்கியிருக்கிறார்களாம்! இந்தக் குற்றச் சாட்டை ரூபிக்கும்படியாக பண்டித ஜவஹர்லால் அவருக்கு சவால் விடுத்திருக்கிறார். அதற்குப் பதிலாக ஸ்ரீ ஜின்னா அர்த்தமற்று ஏதேதோ பேசுகிறார்.

ஸ்ரீ ஜின்னாவின் விஷமப் பிரசாரம் நாட்டில் பரவுவதற்கு முன்பே காங்கிரஸ் அதற்கு வழியின்றி செய்வது மிகவும் அவசியம். காங்கிரஸ் சர்க்கார்கள் ஸ்ரீ ஜின்னாவின் குற்றச் சாட்டிற்குச் சரியான பதில் அளிக்க வேண்டும். பாக்கி யிருக்கும் இரண்டு வகுப்பு வாத மந்திரிசபைகளையும் தீவிரமாக முயன்று கலைத்துக் கூட்டு மந்திரி சபைகள் அமைப்பது மிகவும் அவசியம்.

சென்னை மாகாணம் சம்பந்தபட்ட மட்டில் முஸ்லீம்லீக் இங்கே தலையெடுப்பதற்கே நியாயம் கிடையாது. சென்னை சர்க்கார் எவ்விதத்திலும் முஸ்லிம் உரிமைகளையோ வசதிகளையோ பாதிக்கும்படியாக ஒன்றும் செய்யவில்லை. சொல்லப்போனால் சில முஸ்லீம் அங்கத்தினர்கள் அர்த்தமில்லாமல் 'வந்தே மாதர' கீதத்திற்கு ஆட்சேபணை எடுத்துக் கொண்டதைக்கூடப் பொருட்படுத்தி அதை நிறுத்திவிட்டார்கள்.

ஆனால் காங்கிரஸ் கமிட்டிகள் இடைவிடாமல் மக்களிடையே பிரசாரம் செய்து காங்கிரஸ் வகுப்பு வாதத்திற்கு விரோதியென்பதை யாவரும் அறியும்படி செய்ய வேண்டும்.

முஸ்லீம் சகோதரர்களும் காங்கிரஸ் சலுகை காட்டுகிற தென்பதற்காக அதிகமாகவும் அதைக் கசக்கி நுகர்ந்து பார்ப்பது உசிதமல்ல. என்னவானாலும் தாங்கள் சிறுபான்மையோர் என்பதை உணர்ந்து ஒத்துப் போக வேண்டியது மிகவும் அவசியம். அடிக்கு அடி ஆட்சேபணை என்றால் ஒன்றும் நடைபெறாது.

## அவசியம் தான்!

வகுப்புவாதம் இப்படியும் ஜாதித்துவேஷப் பிரசாரம் நமது மாகாணத்தில் அரசியல் உருவத்துடனும் நடமாட ஆரம்பிக்கும்பொழுது நாட்டில் தீவிரப் பிரசாரம் செய்ய பெரும் செயல் சக்தி வாய்ந்த தலைவர்கள் மிகவும் அவசியம். காங்கிரஸ் மந்திரி பதவியைப் பல மாகாணங்களிலும் ஏற்றிருப்பதால் முதல்தரமான தலைவர்களில்பெரும்பான்மையோர் அதிகாரப் பதவியில் போய் அகப்பட்டுக்கொண்டு விட்டார்கள். எனவே காங்கிரஸ் கமிட்டிகளும் அவற்றின் கிளை ஸ்தாபனமும் சற்றே வலுவற்றுப் போய்விட்டன.

இந்த சமயத்தில் ஸ்ரீ எஸ். ஸ்ரீனிவாச அய்யங்காரைப் போன்ற கர்மவீரன் பொது வாழ்வில் ஈடுபட வந்ததை நாம் மிகவும் பாராட்டுகிறோம். வெகு நாளாகவே நாம் ராஜாஜிக்குச் சமமான திறமை வாய்ந்த தலைவர் சட்ட சபைக்கு வெளியே இல்லையே என்று எண்ணியிருந்தோம். ஸ்ரீ சீனிவாச அய்யங்கார் அந்த ஸ்தானத்தைப் பூர்த்தி செய்ய லாயக்குள்ளவர். அவர் தமது சக்தியை இந்த மாகாணத்திற்கு மட்டுமின்றி இந்தியா பூராவிற்குமே தற்சமயம் அர்ப்பணம் செய்யவேண்டியது மிகவும் அவசியம்.

## இனி மேல்?

ஸ்ரீ வர்க்கி மந்திரியாகி விட்டதிலிருந்து ஒரு கூச்சல் அடங்கிவிடும். கிருஸ்துவர்களுக்கு சென்னை மந்திரி சபையில் பிரதிநிதித்துவம் அளிக்கவில்லையென்று அதை ஒரு பெரும் குற்றமாகச் சாட்டி ஸர். பன்னீர் செல்வம் இத்தனை நாள் ஆர்ப்பாட்டம் செய்துகொண்டிருந்தார். சமயம் வந்தபோது பிரதம மந்திரி அந்தக் குறையையும் நீக்கிவிட்டார். இனி மேல் ஸர். பன்னீர்ச் செல்வம் அதை ஒரு சாக்காக வைத்துக்கொண்டு குதிக்க முடியாது.

அதைத் தவிர, ஸ்ரீ வர்க்கி கல்வி மந்திரி பதவிக்கு மிகவும் லாயக்கானவர். நல்ல

உழைப்பாளி; ஊக்கமுள்ளவர். கல்வி விஷயங்களில் நல்ல அனுபவம் பெற்றவர். ஆர்ப்பாட்டமில்லாமல் வேலை செய்பவர். கட்சிக் கட்டுப்பாட்டில் மிகவும் ஈடுபட்டவர். முதலிலேயே இவர் ஒரு மந்திரி பதவி பெறவேண்டியவர். ஸ்ரீ வர்க்கியின் திறமையை யுணர்ந்து அவருக்குச் சரியான ஸ்தானம் அளித்ததற்காக நாம் பிரதம மந்திரியைப் பாராட்டுகிறோம்.

## தர்மோபதேசம்

அமெரிக்கத் தலைவர் ரூஸ்வெல்ட் தர்மோபதேசம் செய்கிறார். ஜனநாயகத்தின் குணாதிசயங்களை வாயார விவரித்துவிட்டு, அது தான் எதிர்காலத்தில் உலகத்தை சர்வாதிகாரிகளின் கையிலிருந்து மீட்டு தர்ம ஸம்ஸ்தாபனம் செய்யப்போகிறது என்றார். ஹிரண்யன் பாயாகச் சுருட்டிக்கொண்டு போய்விட்ட பூமியை மகாவிஷ்ணு மீட்டுக்கொண்டு வந்ததுபோல ஜனநாயகம் (அதாவது அமெரிக்கா!) உலகத்தை மீட்கப் போகிறது! அதற்காகத் தான் அமெரிக்கா பிரம்மாண்டமான ஆயுத விஸ்தரிப்பு திட்டம் போடுகிறதாம். அமெரிக்கா உலகத்தைக் காக்கவேண்டுமானால் தன்னைத் தானே முதலில் பலப்படுத்திக்கொள்ள வேண்டாமா? இந்த இடத்தில் உயர்ந்த வேதாந்தத்திற்கும் லட்சியங்களுக்கும் நடுவில் நன்னலமும் சிறு நினைவும் நடுவில் வந்து புகுகிறது, சனியன்!

"அமெரிக்கா (மேற்கித்திய உலகம்) அக்கரையிலிருந்து வரும் எவ்வித எதிர்ப்பையும் தாங்கத் தயாராகிறது. இதனால் அன்னிய நாடுகளை நாம் ஒதுக்குகிறோம் என்பதல்ல; அவற்றைப் பகைக்கிறோமென்பதல்ல" என்கிறார். வானமளாவும் உணர்ச்சிக்கு நடுவே இதென்ன அபஸ்வரம்? உண்மையென்ன?

## ஜப்பான் பேராசை

ஜப்பான் போட்டிருக்கும் பேராசைத் திட்டம் தான் அமெரிக்காவின் ஆயுத விஸ்தரிப்பதற்குக் காரணம். சீனாவில் அகப்பட்டுக் கொண்டு இடுப்பு ஒடிந்து நிற்கும் ஜப்பான் எந்த ஆதாரத்தைக் கொண்டு இப்பேர்ப்பட்ட திட்டம் போடுகிறதோ தெரியவில்லை.

அதுவும் வேதாந்தம் தான் பேசுகிறது. 'உலகத்தை உயிர்ப்பிப்பதற்காக, ஒரு நூறு வருஷ யுத்த திட்டம்' போட்டிருக்கிறது ஜப்பான். 'தற்காலத்துக் குழம்பிய உலகத்திலிருந்து கீழ் இந்தியாவையும் ஆசியப் புனருத்தாரணத்தையும் சிருஷ்டிப்பது தான் ஜப்பானின் சாம்ராஜ்யப் பாதை' என்று ஜப்பானிய ராணுவத்தலைவர் ஒருவர் எழுதுகிறார். உலகத்தை அமைதிக்குக் கொண்டு வருவதற்கு தகுதியுள்ள தேசம் ஜப்பானு ஒன்று தானும்! எப்படி இருக்கிறது இந்த லட்சியம்?

ஜப்பானின் ஆக்கிரமிப்புக்கு அஞ்சித் தான் முக்கியமாக அமெரிக்கா நிகரற்ற ஆயுத விஸ்தரிப்பைச் செய்கிறது. அதுவும் உலகத்தைக் காப்பாற்றத் தான் முன் வருகிறது. சர்வாதிகாரிகளும் அப்படித் தான் சொல்லுகிறார்கள். உலகத்தைக் கடவுள்தான் காப்பாற்றவேண்டும்!

## சேம்பர்லேன் குருக்கள்

பிரிட்டிஷ் பிரதம மந்திரி ஸ்ரீ சேம்பர்லேன் ஜனவரி 10-ம் தேதியன்று முஸோலினியைச் சந்திப்பதற்காக ரோம் செல்கிறார்.

நமது கோவில்களில் குருக்கள் கையில் நைவேத்தியமும் மணியும் எடுத்துக்கொண்டு சன்னதி, சன்னதியாகச் சென்று மணியடித்து நைவேத்தியம் செய்வார். அதுபோல ஸ்ரீ சேம்பர்லேன் மியூனிச்சுக்குப் போய் ஹிட்லர் சன்னதியில் மணியடித்து ஜெக்கோஸ்லோவேகியாவை நைவேத்தியம் செய்தார்; இப்பொழுது முஸோலினி சன்னதிக்குப் போகிறார்; துணைக்கு (மணியடிக்க) லார்டு ஹாலிபாக்ஸையும் கூட்டிக்கொண்டு போகிறார். இந்த சன்னதியில் என்ன நைவேத்தியம் கொடுத்துவிட்டு வந்துவிடப் போகிறாரோ என்று பிரிட்டிஷ் பொதுமக்கள் கலங்குகிறார்கள்.

லார்டு ஸெஸில், ஆதோல் சீமாட்டி இவர்கள் தலைமையில் ஒரு பிரதிநிதிகள் கூட்டம் ஸ்ரீ சேம்பர்லேன் இன்னென்னதைச் செய்துவிடக்கூடாது என்று விண்ணப்பித்துக் கொண்டிருக்கிறது. செய்யக்கூடியது செய்யக் கூடாது என்பது சேம்பர்லேன் கையிலேயே இல்லைபோலிருக்கிறதே! முஸோலினி கையில் அல்லவா இருக்கிறது நடக்கப் போகிற விஷயம்.

இங்கிலாந்தில் எதிர்கட்சி அங்கத்தினர்கள் சேம்பர்லேனை வீழ்த்திவிட வேண்டுமென்று தலைகீழாய் நின்று பார்க்கிறார்கள். ஒன்றும் சாயவில்லை. ஏன்?

பிரிட்டிஷ் பொதுமக்கள் சேம்பர்லேனின் நடத்தைகளை மனமார ஆதரிக்கிறார்கள் என்பதல்ல இதற்குக் காரணம். வேறு வழியில்லை என்று சும்மா இருக்கிறார்கள். அவர்களை யுத்த பீதி பிடித்துக்கொண்டிருக்கிறது. வேறுயாராவது பிரதமமந்திரியானால் நிலைமை மாறி யுத்தம் வந்துவிடுமோ என்ற பயத்தால் தான் இன்று சேம்பர்லேனின் ஆட்சியை அனுமதித்திருக்கிறார்கள்.

# போகிற போக்கில்



நமது பாரத நாட்டில் இப்பொழுது அரசியல் வழியில் ஏராளமான ஊக்கமும், கிளர்ச்சியும், வீரமும் எங்கும் ஏற்பட்டு இருக்கிறதென்பதற்குக் கொஞ்சம் கூட ஐயமில்லை. சென்ற வாரம் ராஜபாளையத்தில் நடந்த அரசியல் மகாநாடே இதற்கு முக்கியமான சாக்ஷி. இருபத்தி ஐயாயிரம் ஜனங்களுக்குக் குறைவில்லை. அதுவும் பன்னிரண்டு ஜில்லாக்களிலிருந்து பொருக்கி எடுத்த கூட்டம். வந்த பிரதிநிதிகள் அனேகமாய் அவரவர்கள் ஊரில் செல்வத்திலும், படிப்பிலும், அங்கங்கு தலைமையிலும் சிறப்படைந்தவர்கள். திருவிழாக் கூட்டமென்று சொன்னேன். ஆனால் பொறுக்கி எடுத்த திருவிழாக் கூட்டம். தேர்க்கூட்டமல்ல.—நாயனக்காரன் முன்னால் இரவு முழுவதும் நின்று கண், காது சலிக்காமல் சங்கீதத்தை ரசிக்கும் ரசிகரின் கூட்டம்போல். நமது அரசியல் மகாநாட்டில் தேசபக்திக்குக் குறைவில்லை. எந்த தியாகத்திற்கும் தயார். ஊக்கத்திற்குக் கேட்க வேண்டுமா? தலைவர்கள் வார்த்தை வேத வாக்கியம். நெருப்பில் விழு என்றாலும், விழத் தயார். லாபம் அல்லது பயன் என்னவென்றுகூடச் சோதிக்கும் நோக்கமில்லை. இவ்வளவு குணமடங்கிய பெரும் கூட்டத்தின் குணப் பெருக்கை, சோனை மழைக்குப்பின் ஆற்றில் பெருகும் வெள்ளத்தை வேளாண்மைக்குப் பயன்படுத்த வேண்டியது தலைவர்களின் முதற் கடமை. இவர்களுடைய வீரத்தையும், சாந்த சேவையையும் தியாக புத்தியையும் சரியான வழியில் போக உடனே வழிகாட்ட வேண்டியது அவசியம். சரியான வழிகளென்ன? அரசியல் திட்டங்களில் எந்த திட்டங்களை முதல் முதல் கையாள வேண்டும்? இவைகளைக் கண்டு தெரிந்தெடுத்து நமது கொள்கைகளையும் நிறைவேற்ற நமது தேசத்திற்குப் புத்துயிரளிக்க வேண்டும்.

* * * *

இருபத்தி ஐயாயிரம் ஜனங்கள் பிரதிநிதிகள் உள்பட கன்யாகுமரியிலிருந்து ஸ்வர்ணமுகி வரையிலும் பல இடங்களிலிருந்து ராஜபாளையம் வந்திருந்தார்கள். ஒவ்வொருவருக்கும் மகாநாட்டு விஷயத்தில் ரூ. 15 செலவென்பது வைத்துக் கொண்டாலும் மொத்தச் செலவு எவ்வளவாகிறது? சுமார் 4 லக்ஷம். இதோடு வரவேற்புக் கமிட்டி வகையறா இதரச் செலவுகளைச் சேர்த்தால் மகாநாட்டு வாரத்தின் செலவு ஐந்து லக்ஷத்திற்குக் குறையாது. இதற்குத்தக்க பயன், கிளர்ச்சி ரூபம் தவிர, காரிய ரூபத்தில் நாம் அடைய வேண்டாமா? அழகான தீர்மானங்களுக்கு உண்மையில் அழகு அவைகள் நிறைவேறும் போதுதான். ஜனங்களின் பழக்க வழக்கங்களிலும் தினசரி வாழ்க்கையிலும் அன்வயப்படும் போதுதான். இந்த ஐந்து லக்ஷ ரூபாய் கணக்கு எடுக்கும்போது எனக்கு நமது தொழில் மந்திரி ஞாபகம் வந்தது. இந்தப்பணத்தை ஸ்ரீ கிரி கையில் கொடுத்தால் அவர் பரபரப்பு ஆவல் நிறைவேறும். ஒவ்வொரு ஜில்லாவிற்கு ஒரு "மியூஸியம்-கம்-எம்போரியம்" உடனே ஏற்படுத்தி விடுவார். கைத்தொழில் மிகவும் அபிவிருத்தியாகும் என்பதில் சந்தேகமில்லை. என் கையில் கொடுத்தால் மூன்று ஏகருக்கு ஒரு துறவு வீதம் மேட்டுப் பாங்கான ஆற்றுப் பாய்ச்சலில்லாத பிரதேசங்கள் எங்கும் ஒரு துறவு இறக்கி அதை பட்டாதார் கையில் கொடுப்பேன். வரும் காலம் பத்து வருஷத்திற்கு நமது நாட்டில் திருநாள், திருவிழா கூட்டத்

திற்கு அரசியலிலும் நியாயமில்லை. மகாத்மா காந்தி சொன்னதுபோல் பத்து லக்ஷம் ரூபாய் செலவழித்து ஒரு கிராமத்தில் காங்கிரஸ் கூட்டுவானேன்? இப்பொழுது நமது முக்கியமான தேவை சரியான சட்ட திட்டங்களைப் போட்டு அவைகளை நிறைவேற்ற வேண்டியது. நமது காங்கிரஸ் மந்திரி சபை அவைகளை அமுலுக்குக் கொண்டுவர வேண்டிய வழிகளையும் சட்ட திட்டங்களையும் உடனே ஏற்பாடு செய்யவேண்டும்.

ராஜபாளையத்தில் அரசியல் மகாநாட்டில் நிறைவேறின தீர்மானங்களில் மூன்று தீர்மானங்களை அவசரமாய் நாம் அமுலுக்குக் கொண்டு வராத வரையில் இருபது வருஷ காலமாய் நாம் உழைத்துவரும் உழைப்பெல்லாம் வீண் உழைப்பாய் போய் விடும். விழலுக்கிறைத்த நீராகி விடும். இறப்பங்கூடை சுலபமாய் கைக்கு கிட்டவில்லையென்று சமீபத்தில் வீணாய் கிடக்கும் சல்லடையை வைத்துக்கொண்டு இரைப்போமென்று இரைத்தால் கைவலி தான் மிச்சம். தோள் வலிதான் மிச்சம். பயனேது? அல்லது கிணற்றிலிருந்து இறைத்த நீரைச் சரியாய் வாய்க்கால் மஞ்சிபோட்டுக் கொண்டு போனால் தானே வயிலுக்கு நீர் போய் எட்டும்? வழியில் ஒரு மூட்டை அல்லது எலி வளை இருந்தாலும் போதும். காரியம் கெட்டுப் போய் விடும். இந்த உபமானத்தை எப்பொழுதும் அரசியல் கிருஷியில் ஞாபகம் வைத்துக் கொள்ளவேண்டும். மூட பக்தி மாத்திரம் போதாது. அதனால் பரலோக சாதகம் கிடைத்தாலும் கிடைக்கும். இகலோக சாதகத்திற்கு மூடபக்தி போதாது பக்தியின் தன்மை வரண்ட பூமிக்கு பருவகால மழை பெய்வதுபோல். உழவிற்கு நிலத்தை சிநேகமாக்கிவிடும். வெகு காலம் ஈரம் காக்கும். நமது கடமை நல்ல தருணத்தில் தக்க கலப்பைகளைக் கொண்டு ஈரம் காய்ந்துபோகும் முன் உழ வேண்டியது. இந்தத் தியாக புத்தியும், ஊக்கமும் கிளர்ச்சியும் ஓய்வடையு முன் நாம் காற்றுள்ளபோதே தூற்றிக் கொள்ள வேண்டும். கண் கொட்டாமல் காலஹரணம் செய்யாமல் நமது தலைவர்களும் மந்திரி சபையும் சரியான சட்டதிட்டங்களைத் தயார் செய்து ஏக காலத்தில் ஒத்துப் பொருத்தி அவைகளை அமுலுக்குக் கொண்டுவர வேண்டும். இப்படிக் கொண்டு வரவேண்டிய விஷயங்களில் மூன்று விஷயங்களுக்கு ஏக காலத்தில் நாம் முதன்மை கொடுக்க வேண்டும். இந்த மூன்றும் தான் நமது நாட்டின் செழிப்பிற்கும், முன்னேற்றத்திற்கும் அடிப்படையாயுள்ளன.

1. கிராம பஞ்சாயத்து நிர்மாணம்.

2. ஆரம்பக் கல்வி முறை திட்டம்.

3. நிலவரி, நிலம் நீர் உரிமைகள்—இவற்றில் முக்கியமான சீர்திருத்தம்.

ஒவ்வொன்றைப்பற்றியும் வரிசைக்கிரமமாக எனக்குத் தெரிந்ததை நான் அடுத்த வாரம் முதற்கொண்டு எழுத முயலுகிறேன்.

மணி.

---

## ஆசிரியர் அறிக்கை

முக்கியமாக கிராமப் புனருத்தாரணத்தைப் பற்றியும், பொதுவாக ஸ்தல ஸ்தாபன, ரோட்டு, ரயில் சௌகரியா சௌகரியங்களைப் பற்றியும், நேயர்கள் தங்களுக்குத் தோன்றும் ஆலோசனைகளை நமக்குச் சுருக்கமாக எழுதி அனுப்புமாறு கோருகிறோம். அந்த யோசனை நமது சமூக வாழ்வின் எந்த அம்சத்தைக் குறித்தாகிலும் இருக்கலாம்; தனி நபரைக் குறித்துமட்டும் இருக்கக் கூடாது.

ஆசிரியர்

# வார நடப்பு

சென்ற சில வாரங்களாக அமெரிக்காவும் ஜெர்மனிக்கும் இருந்த அபிப்ராய பேதம் இப்போது சச்சரவாக மாறி வருகிறது. அமெரிக்கத் தலைவர் ரூஸ்வெல்ட் யதேச்சாதிகளைத் தாக்கி பிரதிநிதி சபையில் ஓர் பிரசங்கம் செய்தார். இதைத் தொடர்ந்து ஜெர்மன் பத்திரிகைகள் ரூஸ்வெல்டைத் திட்ட ஆரம்பித்தன. இதனால் மனஸ்தாபம் வளர்ந்து வருகிறது.

அமெரிக்கா புது வருஷ வரவு செலவுத் திட்டத்தில் ஆயுத முஸ்தீப்புக்காக ஏராளமான தொகையை ஒதுக்கி வைத்திருப்பதையும் அறிகிறோம்.

சென்ற வாரத்தில் ஸ்பெயினில் கலகக்காரர்கள் சில முக்கியமான இடங்களைப் பிடித்து விட்டதாகத் தெரிய வருகிறது.

ஸ்ரீ. சேம்பர்லேனும் ஹாலிபாக்ஸ் பிரபுவும் ரோமாபுரிக்கு போவதற்காக சகலவிதமான ஏற்பாடுகளையும் செய்து விட்டதாக ஐரோப்பியச் செய்திகள் கூறுகின்றன.

சென்ற வருஷத்தில் 2000 பேர்கள் பாலஸ்தீனத்தில் கொல்லப்பட்டிருப்பதாகத் தெரிகிறது.

ஹங்கேரி—ஸெக் தகராறு மறுபடியும் ஆரம்பித்து விட்டது. எல்லைப்புறச் செய்தி ஒன்று இரு தேசத்து எல்லைப்புறப் படைகளும் கைகலந்ததாகக் கூறுகிறது.

கிழக்கே திரும்பினால் சைனா—ஜப்பான் சமரசப் பேச்சு வார்த்தைகளைக் கேட்கிறோம். சைனா ஜப்பானுடன் சமரசம் செய்துகொள்ள வேண்டுமென்று டாக்டர் வாங் சிங் வி என்ற ராஜதந்திரி சொன்னதாகவும் அதற்காக சைனா அவர்மேல் கோபங் கொண்டு நாடு கடத்தி விட்டதாகவும் அறிகிறோம். மூன்று சைன தூதர்கள் சமரச ஏற்பாட்டை ஆதரித்ததாகக் கூறும் வதந்தி பொய் என்பதை ராய்ட்டர் கூறுவதைக் கேட்டதும் நமது தலைபோகிற கவலை நீங்குகிறது. 35 சீன தளபதிகள் சமரச ஏற்பாட்டுக்கு இடம் கொடுக்கக் கூடாதென்று சீனத் தலைவர் மார்ஷல் சியாங்கெய் ஷெக்குக்குத் தந்தி கொடுத்திருக்கிறார்களாம்.

இப்பொழுது நமது முகத்தைக் கொஞ்சம் பார்த்துக்கொள்ளலாம். இந்தியாவில் 'சமஷ்டி' பற்றி வாக்குவாதங்கள் பலமாய்க் கேட்கின்றன. சென்ற வார இறுதியில் சர்தார் வல்லபாய் படேல் பேசியபோது சமஷ்டித் தேர்தல்களிலும் காங்கிரஸ் வெற்றியடையுமென்றும் அதில் சந்தேகமில்லை என்றும் கூறினார்.

வைஸ்ராய் சௌகர்யமாக கொச்சி வந்து சேர்ந்து சமஷ்டியின் மேன்மையைப் பற்றி எடுத்துக் கூறுகிறார்.

எல்லோரும் வருந்தத்தக்க ஓர் விஷயம் ரான்பூரில் நிகழ்ந்து விட்டது. சமஸ்தான அரசியல் ஜெண்ட் மேஜர் பேஜல்கட் என்பவரை கோபமடைந்த ஓர் ஜனக்கூட்டம் தாக்கிக் கொன்று விட்டது. இந்த பாதகத்தை காந்திஜி, நேரு முதலிய தலைவர்கள் கண்டித்து விட்டார்கள். இத்தகைய பலாத்காரத்தால் அந்த சமஸ்தானப் போராட்டத்திற்கு மட்டுமில்லாமல் அகில இந்திய சுதந்திரப் போராட்டத்திற்கே கெடுதல் என்பது தலைவர்கள் அபிப்ராயம்.

தோழர் ஜின்னாவுக்கும் பண்டித நேருவுக்கும் ரஸமான கடிதப் போக்குவரத்து நடந்திருக்கிறது. காங்கிரஸின் பேரில் சாட்டப்பட்ட குற்றங்களை ருஜுப்பிக்கும்படி நேரு கேட்க, "ஆஹா அப்படியே செய்கிறேன்" என்று ஜின்னா சொல்ல அதற்காக ஒரு பக்ஷபாதமற்ற விசாரணைக் கமிட்டி நியமிக்க வேண்டுமென்று நேரு சொல்ல, விஷயம் இவ்வளவு தூரத்திற்கு வந்திருக்கிறது. ஆனால் ஜின்னாவின் மனப்பான்மையைப் பார்த்தால் இந்த விசாரணை யெல்லாம் நடக்குமா என்பது சந்தேகம்.

ஸ்ரீ. ராமன் மேனன் அகால மரணத்தால் காலியான மந்திரி ஸ்தானத்திற்கு ஸ்ரீ. வி. ஜே. வார்க்கி நியமிக்கப்பட்டிருக்கிறார்.

திருவாங்கூரில் வைஸ்ராய் விஜயத்தை முன்னிட்டு அமைதி நிலவியபோதிலும் அங்கங்கே 'தடுக்கப்பட்ட மகஜர்' வாசிக்கப்படுவதாகத் தெரிகிறது.

ஹைதராபாத் சத்யாக்ரஹ சம்பந்தமாக காந்திஜிக்கும் ஸர். ஹைதாரிக்கும் கடிதப் போக்கு நடந்து கொண்டிருக்கிறது. இதன் மூலமாக ஒரு சமாதானம் ஏற்படலாம் என்று பத்திரிகை நிருபர்கள் நம்புகிறார்கள்.

தமிழ்நாட்டில் ஹிந்தி எதிர்ப்புக் கிளர்ச்சியைக் கண்டித்துப்பிரசாரம்செய்யப்படுகிறது. கும்பகோணத்தில் ஆயிரக்கணக்கான ஜனங்கள் ஹிந்தியை ஆதரித்து ஊர்வலம் வந்தனர். சில காலிகள் கூட்டத்தில் கல்லைவிட்டு எறிந்து ஐந்து பேர்களைக் காயப்படுத்தி தங்கள் கைங்கர்யத்தைச் செய்துமுடித்தார்கள்.

# சங்கீத வித்வத் சபை

சென்ற வாரம் சங்கீத வித்வத் சபையின் நடவடிக்கைகளை சுருக்கமாகக் கூறினோம். சங்கீதக் கச்சேரியின் முறையில் செய்யவேண்டிய சில சீர்திருத்தங்களைப் பற்றிக் கொஞ்சம் சொல்ல விரும்புகிறோம்.

ராகம், தானம், பல்லவி, ஸ்வரம் இவை இப்பொழுது கச்சேரிகளில் குறைந்தே போய்விட்டன. கீர்த்தனைகளும் சில்லறை உருப்படிகளும் அதிகமாகிவிட்டன. பாமர மக்களின் மனோபீஷ்டப்படி வித்வான்களும் தங்கள் லட்சியத்தைக் குறைத்துக் கொண்டு இப்பேர்ப்பட்ட ஒரு நிலைமையை ஏற்படுத்தியது விசனிக்கத்தக்கது. கலா நாசத்தைத் தடுக்கவேண்டுமானால் சங்கீதத்திற்கு ஜீவநாடியாகவும் கற்பனைக்கு வித்தாயும் விலை நிலமாயு மிருக்கிற ராகம், தானம், பல்லவி, ஸ்வரம்—இவற்றை வித்வான்கள் பாவத்துடன் பாடி பொது மக்களின் ரஸிகத் தன்மையை சரியான அணைபோட்டுத் திருப்பி வளர்ச்சி வழியில் விடவேண்டியது மிகவும் அவசியம்.

இலக்கியத்திற்குப் பாவலன் எப்படியோ அப்படியே சங்கீதத்திற்கு நாம் 'வித்வான்' என்று குறிப்பிடும் கலைஞன். சங்கீதக் கலையின் இரண்டு பகுதிகளாகிய ஸ்வர, சாகித்தியங்கள், சாரீரத்தின் மூலமாகவும், நாகஸ்வரம், புல்லாங்குழல், வீணை முதலிய வாத்தியங்கள் மூலமாகவும், மிருதங்கம், கெத்து முதலிய தாள வாத்தியங்கள் மூலமாகவும் இசை உருவம் கொண்டு இன்பம் அளிக்கின்றன. சங்கீதத்தில் சாகித்தியத்திற்கோர் இடமுண்டு என்பதில் சந்தேகமில்லை; ஆனால் சாகித்தியம் சங்கீதமல்ல. ஸ்வர சமுச்சயமான நாதம்தான் சங்கீதம். ராக பாவத்தினால்தான் சங்கீதம் முக்கியமாக மனிதனை மயக்கித் தன்மயமாக்குகிறது.

சங்கீதத்தின் விருத்தியம்சம் சாகித்தியத்தில் (அதாவது கீர்த்தனைகளில்) அதிகமாகக் கிடையாது. ராகம், தானம், பல்லவி, ஸ்வரம் இவற்றிலுள்ள கற்பனையில்தான் முக்கால் பாகம் வளர்ச்சிக்கு இடம் இருக்கிறது. சாகித்தியத்தில் 'சங்கதி', 'நிறவல்' தவிர வேறு விதமாகக் கற்பனைக்கு இடமில்லை. ஆனால் ஸ்வரமும் சாகித்தியமும் முறையே ராக பாவமும் அர்த்த பாவமுமாக சங்கீதத்திற்கு இரண்டு சிறகுகளாக இருக்கின்றன. ஒரு வித்தியாசம். வெறும் ஸ்வரம் சங்கீதமாகும்; வெறும் சாகித்தியம் சங்கீதமாகாது.

கர்னாடக சங்கீதத்தின் வளர்ச்சியில் மூன்று கிளைகள் இருக்கின்றன: ஹரி கதை, கச்சேரி, பரதநாட்டியம். ஹரி கதையில் (இதில் பஜனை பந்தாவையும் சேர்த்துக் கொள்ளலாம்) சாகித்தியம் அல்லது நாம சங்கீர்த்தனம் முக்கியத்துவம் கொள்ளுகிறது. சங்கீதம் அதற்கு துணையாக மட்டும் இருக்கிறது. பாட்டுக் கச்சேரி என்று வழங்கப்படுவதில் கீத வாத்திய மிருதங்கங்களோடு கூடின சுத்த சங்கீதம் தலையெடுக்கிறது. சாகித்தியம் அங்கங்கு உச்சரிப்புக்கு உதவி கோலாக் மட்டும் இருக்கிறதென்று கூடச் சொல்லி விடலாம். ஆனால் பரத நாட்டியத்தில் சங்கீத சாகித்தியங்களுக்கு சமமான முக்கியத்துவம் இருக்கிறது. இரண்டும் இரண்டு கைகள் போல இருந்து அபிநயத்திற்கும் நிருத்தியத்திற்கும் அர்த்தம் கொடுக்கின்றன.

சங்கீத வித்வத் சபையிலாவது வித்வான்கள் ராகம், தானம், பல்லவி, ஸ்வரங்களை அதிகமாகப் பாடவேண்டாமா? இந்த வருஷம் டைகர் வரதாச்சாரியார் கச்சேரியில் தான் இந்த அம்சங்களைக்கொஞ்சம் அதிகமாகக் கண்டோம்;செம்மங்குடி ஸ்ரீனிவாச அய்யரும் பாடினர்; வேறு யாரும் அதிகமாகப் பாடவே இல்லை—பாடவே இல்லையென்று சொல்லி விடலாம். ராகம் ஸ்ரீ பாலசுப்ரமணியம் அவர்களிடம் நன்றாக இருந்தது.

கச்சேரிகளுடன் ஹரிகதைகளுக்கும் பரத நாட்டியத்திற்கும் சபை திட்டம் போடவேண்டும். ஹரிகதை செய்வதில் திறமையுள்ளவர்கள் இல்லையா? ஸ்ரீமதி ஸரஸ்வதிபாயின் கதை ஏன் வைக்கக் கூடாது? ஆவுடையார் கோவில் ஸ்ரீ ஹர ஹர பாகவதர் கதை ஏன் வைக்கக் கூடாது?

சங்கீத விஷயமாகப் பிரசங்கங்களும் இன்னும் அதிகமாக இருக்கவேண்டும். வருகிற வருஷம் வித்வத் சபை இன்னும் சிறப்பாக இருக்கும் என்று எதிர் பார்க்கிறோம்.

இந்த வருஷம் நடந்த பரத நாட்டியக் கச்சேரிகள் மொத்தத்தில் ஸ்வாரஸ்யமில்லையென்றுதான் சொல்லவேண்டியிருக்கிறது. ஸ்ரீ பாலசந்திராவிற்கு முகத்தில் அணுவளவேனும் பாவம் இல்லை. எப்படியிருக்கும்? பரதநாட்டியம் என்ன கிள்ளுக்கீரையா? யார் வேண்டுமானாலும் எப்பொழுது வேண்டுமானாலும் நாட்டியமாடி விடலாமா என்ன? தகுந்த அனுபவ சக்தியும் ரஸிகத் தன்மையும் வேண்டாமோ? வரலக்ஷ்மியிடம் இருந்தது. அவர் போய்விட்டார்.

ஸ்ரீ பால ஸரஸ்வதியிடமும் தத்பாவமும் லயப்பும் இல்லை. நாடகத்தில் ஆடுவதுபோல இருந்தது. சில பதங்களுக்கு அபிநயம் ஹரிகதைக்காரர் செய்வது போல்தான் இருந்தது. 'நடனமாடினார்' என்பதில் நடராஜனின் காலை அந்தமாதிரி பூரவிட்டிருக்கக் கூடாது. முன்னெத்தித் தலைமயிரை ஆட்டத்தின் நடுவில் அடிக்கடி முகத்தில் விழுந்ததை தள்ளிவிட்டுக் கொண்டது ஆபாஸமாக இருந்தது. நடிகை தன்னையே மறக்கவேண்டும்.

---

# வீரன் குமாரஸ்வாமி

ஜனவரி 11-ம் தேதியன்று தமிழ் நாட்டின் புத்துயிர் வீரன் திருப்பூர் குமாரஸ்வாமி சுதந்திரப் போர்க்களத்தில் தான் நின்ற இடத்தில் நகராமல் நின்று தாயின் மணிக்கொடியை உயர்த்துவதில் உயிர் விட்டார்.

அவர் நினைவு தமிழ் நாட்டில் என்றும் மறையாது. அவர் தியாகம் நமக்கு நம் முன் இருக்கும் இருளில் ஒரு மணி விளக்காக இருக்கும்!

# திண்ணையில்

(தொடர்ச்சி)

(ராவ்சாகேப் கே. சுப்பிரமணியம்)

"இந்த மாதிரிதான் நம்ம ஊர் பெரிசு சிறிசு குடும்பங்களெல்லாம் அலறிப் போச்சு. பாக்கி இருக்கிறதுகளும் கிழுக்கு சருக்கிக் கொண்டேதானிருக்கு. எல்லாம் நாள் கணக்கு. அல்லது மாசம். அல்லது வருஷம். இந்த மாதிரி நாம் சோம்பேறியா இருந்தோமானல் இந்த கதிக்குத்தான் நாமும் வரவேண்டும். ஆகையினல் தான் கொஞ்சம் மானத் தோடே இருக்கணும்னு, சிலவைக் குறைக்கணும் சம்பாதிக்கற வழிகளைத்தேடணும். நிலம் தோப்பு மிருக்கிறதினலே ஊரை விட்டுப் போகவும் முடியாமயிருக்கு. குத்தகைக்கு விட்டுவிட்டு போகலாம் என்ருலோ குத்தகைக்காரன் தான் நம்மைவிட ஜாஸ்தியா பறக்கிருன். அவன் ஏப்பம் விட்டு விடருன். அப்புறம் கோர்ட்டுக்கு வகையில்லே. 'கோவிந்தா, கோவிந்தா!' போட வேண்டியது தான். ஊரிலேயே இருந்துகொண்டு குடும்ப Budget சரிப் படுத்தணும். இப்படி ஒவ்வொருவனும் தன் தன் குடும்பத்தை ஸரிப்படுத்தினு ஊரும் ஸரியாப் போயிடும். தேசமே மேன்மைப்படும். அப்போ ஸர்க்காரைப் போய் பிச்சை கேட்க வேண்டாம். நம்ம கால் மேலேயே நாம் நிற்கலாம். தைரியமும் வந்துவிடும். செல்வமும் உண்டு. இப் படிக்கில்லாமல் சர்க்காரே எல்லாம் செய்யணும், அது கொடுக்கணும் இது தரணும், இதற்கு கிருண்டு கொடுக்கணும், அதற்கு பிச்சை கொடுக்கணும்னு ஏன் கேட்கணும்? ஊர்க்காரனுக்கு சரியான வரும்படி வந்தால் ரோட்டு போட்டுக்க மாட்டான்களா? வீடுவாசல், வாய்க்கால், வரப்பு சுத்தமா யிருக்காதா? வீட்டுக்கு வீடு கிணறு இருக்காதா? துணிமணி நிறையாதா? வியாதிகள் தான் அண்டுமா? டாக்டர் வைத்தியன், ஊரை அண்டி தானே பிழைக்க மாட்டார்களா? ஜனங்கள் சுகத்தோடேயும் ஸந்தோஷத்துடனும், தைரியம், திடகாத்திரமாய் இருக்க மாட்டார்களா? கோயில்குளம் எல்லாம் நன்ரு யிருக்காதா?"

"சரி சரி. தாத்தா, இப்போ நீங்க சொன்னத்திற்கப்புறம் நன்னுத் தெரியறது. என்னமோ கவலையா யிருக்கு. அடுத்த வருஷம் அறுப்பிலே கொடுக்கலாம், அதிலே கொடுக்கலாம், இதிலே கொடுக்க லாம்னு கடன் வாங்கியாச்சு. வட்டியும் ஏறிக்கொண்டே யிருக்கு. நம்ம ஊரிலே கிட்டத்தட்ட எல்லா குடும்பமும் அப்ப டித்தானிருக்கு. பாருங்களேன். இடிஞ்ச வீடு கட்டறத்துக்கு முடியவில்லை. விழுந்த வீட்டின் உத்திரம் நிலை கதவு எல்லாம் ஈனக் கிறயத்துக்கு வித்தாச்சு. அப்பா போட்டிருந்த காளவாக்கல்லும் ஓடும்கூட போனதுபோக பாக்கியைக் கேட்கிற விலைக்கு வித்துவிட வேண்டியதுதான் போலிருக்கு. இனிமே வீடு எங்கே ரிபேர் பண்றது? தினே தினே தரித்திரமாய்க் கொண்டு வறதே நம்ம ஊரும்? இந்த தரித்திரத்தின் கொடுமையாலே திருட்டும் ஜாஸ்தி ஆயிட்டுது ஊரிலே. ஏதோ சமயா சமயத்திலே உதவி பண்ணிக்கொண்டிருந்த கோடி வீட்டுக்காரர் கூட பட்டண வாசமா போயிட்டார். நெல் என்னமோ செலவு ஆய்விட்டது முக்கால் வாசி. கடன் குடுத்த பாடில்லே. வட்டியும் வளர்ரது."

"அதெப்படிடா போதும். இன்னும் உன் பையன் பள்ளிக்கூடம் செலவும் டவுனுக்கு அனுப்பினுல் ஜாஸ்தி ஆய்விடும். மேல்படிப்புக்கு கும்பகோணத்துக்கு பையனே அனுப்பப் போறியோன்னே?

இருக்கிறதைப் பார்த்தால் படிக்க வச்சாப்பிலே தானிருக்கு. கும்பகோணத்துக்கு அனுப்பிருப்போலே தானிருக்கு. இப்போதான் உத்தியோகத்துக்கு அநேகமாய் பிருமணுள் வேண்டாம் என்கிருளே, படிக்கவச்சு எங்கே உத்தியோகம்?"

"நீ சொல்றது தான். பிருமணனைத் தான் எங்கேயும்வேண்டாம் என்கிருளே?

வேணும் என்கிறவாள் ஒருவருமில்லே. இந்த பிருமணன் கதி இன்னம் கொஞ்ச நாளிலே மேலச் சீமைகளிலே யிருக்கிற யூதர்கள் கதி ஆயிடும் போலிருக்கு. அநேகமாய் அந்த யூதர்களைவிட கேவல மாயிருக்கும். ஏன் தெரியுமா? அந்த தேசத்து யூதர்களெல்லாம் நல்ல யுக்தி புத்திசாலிகள், பணக்காரர்கள்; வியாபா ரம், பாங்கிகள் எல்லாம் அவாள் கைவசம். தொழில் முறைகள் நன்ருய் தெரியும். அவாள் எவ்வளவோ மேல் அந்தஸ்தில் இருக்கிறவர்கள். இங்கியோ நம்ம பிரும ணர்கள் எப்படி யிருக்கிருர்கள். பூர்வீ கத்திலே தன்னுடைய ஆசிரம தருமம் தவருமல் வேத விதிப்படி நடந்து கொண் டிருந்தார்கள். மேன்மையா யிருந்தார்கள். பண்டிதர்களா யிருந்தார்கள். ராஜாக்கள் போஷித்தார்கள். வித்தை இருந்தது அவர்களிடத்தில். எல்லாரும் பணிந்து நடந்தார்கள். மதிப்பு மிருந்தது. இப் போதுதான் எல்லாத்துக்கும் துணிஞ்சுட் டார்களே. மதிப்பும் மரியாதையும்போ யிட்டுது. எல்லாரும் வெறுக்கிருர்கள். ஆனு. அடே அசடே! உத்தியோகத்துக் காகவா படிக்கிறது. ஏண்டா? வியாபாரம் செய்யப்படாதா? தொழிற்சாலைகள் வைக் கப் படாதா? தொழில் செய்யும் விதம் முறை வியாபாரம்எல்லாம் எழுதப்படிக்கத் தெரியாமல் போனல் எப்படிடா முடியும்? உத்தியோகம் சேவகம் இதெல்லாம்வேண் டாமே. வேண்டும் என்கிறவா செய்யட் டுமே. பிருமணனுக்கும் ஈசுவரன் கொஞ் சம் மூளை புத்தி ஸாமர்த்தியம் கொடுத்தி ருக்கிருன். அதினலே எங்கேயும் அவன் பிழைக்கலாம். அதுகள் இல்லாதவர்கள் ஸர்க்கார் ஆதரவிலோ அல்லது ஜமீன்தார் ஆதரவிலோ இருக்கட்டுமே. அதினலே பிருமணனுக்கு கெடுதல் என்னடா? இந்த மாதிரி விலகினல்தான் அவனுக்கும் புத்திவரும். சுதந்திரமா பிழைச்சுகிற தற்கு வழி தேடுவார்கள். அவசியம் ஏற் பட்டால் வழிகளுண்டாகும். அப்படி அவன் முதல்லே ஆரம்பித்தானே எல் லாரும் பின்னலே, பின்னலே ஆரம்பிப் பார்கள். தெரியுமா ?

“சரி. நன்னச் சொல்றியள். இப்போ என் குடும்பத்துக்கு தகுந்த வழி சொல் லுங்கள். நான் ஆனவரைக்கும் செய்து செய்து பார்க்கிறேன்.”

“இப்போ நீ முக்கால் வாசி பொழுது வெறுமனே தானே வீணுக்கறே! வயல் கியல் போனபோது போக பாக்கி நேர மெல்லாம், அவன் கிட்டே பேசறது. இவன் கிட்ட வம்பு அதானே. அந்த நேரமெல்லாம் நீ ஏதாவது செய்யலா மோன்னே?”

“செய்யலாம் தான். என்ன செய்ய றது என்று ஒன்றும் தெரியவில்லையே!”

“இப்போ பார். நமக்கு எல்லாம் தரித்திரம் வந்து சூழ்ந்துகொண்டிருக்கு. என்ன வேலையானலும் செய்யத் தயார் என்று மனப்பூர்த்தியா தீர்மானம் பண் ணிக்கணும். எங்கப்பா, தாத்தா எல்லா ரும் அப்படி யிருந்தா, பல்லக்கிலே போனு. ஸாரட் வண்டி பீடனிலே நடந்தா என்கிற கதை யெல்லாம் மறந் துடணும்; உழப்படாது, தொழில் செய் யப்படாது ஸமுத்திரம் தாண்டலாகாது என்கிறதெல்லாம் போயிடணும். எப்போ நாம் உச்ச ஸ்தானத்திலிருந்து கீழே விழுந்துவிட்டோமோ அப்போது அங் கிருக்கிற ஸ்திதியிலேயே முன்னுக்கு வரப்பார்க்கணும். தெரியுமா? ஈசன் விட்டபடி ஆகும் என்கிற வேதாந்தம் கூடாது.”

“சரி.”

“முதல் முதல்லே, நமக்கு திரேக பலம் குறைச்சல். அதை சரிப்படுத்திக் கணும். அதுக்கு சத்துள்ள சாப்பாடு வேண்டும் என்று சொல்ராளோன்னே. அதற்குக் கைக்குத்தரிசி நல்ல காய் கறி கள், கீறைகள், பால், நெய், தயிர் பழம் கிழம் எல்லாம் வேண்டும். நீ மில் அரிசி உபயோகிக்கறே, அது கூடாது. அதுக்குக் கொடுக்கிற கூலி கொஞ்சமானலும் அது வேண்டாம். இந்த ஆகார வஸ்துக்கள் நாமே சரிப்படுத்திக் கொள்ளலாம். இதற்கு ஆகிற செலவுகளை மீர்க்கலாம். உனக்குத்தான் கொஞ்சம் நெலமுமிருக்கு. மாடும் வச்சுக்கலாம். ஆத்திலே உன் ஆம்படையாள் காய்கறிக்குன்னு கொத்த மல்லி, கருவேப்பிலைக்கின்னு எவ்வளவு அரிசி போடரு? கேட்டியா? மொத்தத் திலே எவ்வளவு ஆகும் பார்? நீ காய்கறி வாங்கிறயே, அதுக்கு எவ்வளவு ஆகிறது?”

"எல்லாமா சராசரி தினம் அரை அணுவாவது ஆகும்."

"வருஷத்துக்கு" "கிட்டத் தட்ட ரூ. 12-ம் ஆகும்."

"இந்த காய்கறிகள் உன் தோட்டத்திலே போட்டு சமர்த்தியா சாப்பிட்டு விட்டு நீ விற்கிறதும் போக ரூ. 12-ம் மிச்சம் பண்ணலாமோன்னே?"

"எல்லோரும் போட்டான்னு போடலாம். தேவலைதான். திருட்டு பிரட்டு நடக்காது. நான் மட்டும் போட்டால் யாராவது பிடுங்கித் தின்னுப்பிட்டு போயிடரான்."

"அப்படித்தாண்டா ஒவ்வொருவனும் சொல்கிறான். எல்லாரும், எல்லாரும்னு சொல்லித் தள்ளுகிறாங்கள். நீயும் அந்த எல்லாரிலே ஒருவன் தானே? நீ ஆரம்பம் பண்ணேன்."

"பார்ப்பம். நெல்லைக் குத்தறதுன்னால் ரொம்ப கஷ்டமாயிருக்கே. அவளாலே முடியாது என்கிறாளே. கூலிக்காரிகள்கூட இப்ப நெல்லுக் குத்தறதில்லையே. முடியாது என்கிறாளே."

"ரொம்ப நல்லது. நாமே செஞ்சிக்கிறது. காசும் மிச்சம். திரேகமும் ஊளச்சதை போய் கொஞ்சம் விறுவிறுப்பு முண்டாகும். அதிலே கூட இப்ப நெல்லுக்குத்த உரல் உலக்கை வேண்டாமே. சுலபமா, பேசாமே எந்திரத்திலேயே (திருகு கல்) போட்டு அரைச்சுப்படலாமே."

"எப்படி?"

"நம்ப வீட்டு கல் எந்திரத்திலே மேல் மூடி சக்கரம் நன்றாய் தேஞ்சு போய், துவரை, உளுந்து உடைக்கிற எந்திரம் இருக்கோன்னோ. அதிலேயே இந்த நெல்லையும் அந்த உடைக்கிற மாதிரியே அரைத்துப்பிடலாம். இல்லை நன்னாச் செய்யணும்னா ஒரு மர எந்திரம் ஒண்ணு செய்ஞ்சுக்கோ ஏதாவது ஒரு மரத்துண்டு (கெட்டி மரமாயிருந்தால் நல்லது) $1\frac{1}{2}$ அடி நீளமும் $1\frac{1}{2}$ அடி குறுக்களவுமா (மத்தளக் கட்டை மாதிரி) எடுத்துக்கொ அந்த துண்டு நன்றாய் ரௌண்டாயிருக்கணும். கோணல்மாணலாயிருந்தால் சரியா செய்துகொள். பிறகு அந்த $1\frac{1}{2}$ அடி நீளத்தை சரிபாதியா குறுக்கே அறுத்துவிடு. இப்போ, 2 வில்லைகளாக இருக்கும். ஒவ்வொன்றும் 9" உயரமும் $1\frac{1}{2}$ அடி குறுக்களவுமுள்ள வட்டமான வில்லைகள். இதிலே ஒன்று அடிக்கட்டை. மற்றொன்று மேல் கட்டை. இந்த அறுத்த பாகத்தை (2 கட்டையும் தேய்கிற பாகத்தை) நன்றாய் சமமாக இழைத்து விடு. பிறகு இந்த இரண்டு பில்லைகளிலேயும் உளியினால் நன்றாய் $\frac{1}{8}$ அல்லது $\frac{1}{6}$ அங்குல ஆழமா யிருக்கிறபடி வாய்க்கால் வாய்க்காலாய் குறுக்கேயும் மறுக்கேயும் வெட்டிவிடு. இந்தப் பள்ளங்கள் நெல் அரைக்க அரைக்க தேயும். மறுபடியும் கொத்திக் கொள்ளலாம். முன்னாலே கோடுகள் போட்டு வெட்டினால் நல்லது. அடுத்தபடி அடிக்கட்டைக்கு மத்தியில் ஒரு கெட்டி ஆணி நன்றாயடித்துவிடு. மேல் பில்லையில் இந்த ஆணி சுலபமாய் திரியும்படி ஒரு பொத்தல் மத்தியில் போடு. கீழ் வில்லையில் அடிக்கிற ஆணி 6, 7, 8, அங்குலம் வெளியே நீட்டிக் கொண்டிருக்கணும். இந்த மேல் பில்லை நடு பொத்தலுக்கு 2 பாகத்திலும் 1" தூரம் விட்டு $1\frac{1}{2}$ or $1\frac{3}{4}$ நீளத்திலே ஓட்டை செய். மேலே விரிவாயும் அந்த ஓட்டைகள் கீழே போகப்போக கொஞ்சம் குறுகலா யிருந்தால் நல்லது. பின் அனுபவத்திலே நீயே தெரிந்து கொள்ளுவே. இந்த 2 ஓட்டைகளில்தான் நெல் போகிறது. இதுகள் பில்லை அடிவரையில் போகணும். உள் பாகம் சாய்வா போட்டால் நல்லது. இந்த மேல் பில்லையை நகத்த ஒரு ஓரத்தில் ஒரு பெரிய முளை அடித்துவிடு. இப்போ எந்திரம் தயாராய் விட்டது. (இதைநீயே செய்துகொள்ளலாம் கொஞ்சம் வேலைக்காரனாயிருந்தால் பெரிய வேலை அன்று) இதிலே சொன்ன அளவுகள் கொஞ்சம் முன்னே பின்னே இருக்கலாம். தச்சனை விட்டு செய்யரதாயிருந்தால் மரத்துண்டு, கருவேல மரம், புளியமரம் பிலாமரம் இப்படிப்பட்ட மரம் தேவலை. விலை ரூ. ஒன்று அல்லது $1\frac{1}{2}$ இருக்கலாம். தச்சன் கூலி $\frac{3}{4}$ ரூ. அல்லது 1 ரூ. ஜாஸ்தி. இப்போ நெல்லை மேல் பில்லையின் பக்கத்துக்கு திருப்பினால் அரிசியும் உமியும் விழும். கீழ் கால் அசையப்படாது. உன்னாலே முடியாதபோனால் உன்

ஆம்படையாள், புள்ளே, அவர்களேயும் கூட்டிக்கொள். அவாளுக்கும் உயர்ந்த ஆஸனம் கொடு. எல்லாம் விளேயாட்டா வேலே ஆய்விடும். நெல், பொடியானுல் கொஞ்சம் ஜாஸ்தியா போட்டு அரை. இப்ப்பா அரிசி பழுப்பாயிருக்கும். முளே முறியாது. உமி நன்ருக இருக்கும். தவிடு போகாது. இதிலே 10 படிக்கு 2, 3 படி நெல்லா நிற்கும். பிறகு அரைத்துக் கொள்ளலாம். விழுந்ததை சலித்துப் புடைத்து சாப்பிட்டுப் பாரு. உன் ஆம்பிடையாளுக்கு சொல்லு. கஞ்சி வடிக்கப்படாதுன்னு. பூஜைக்கு அவிஸ் வைக்கிருப்பிலே ஜலம் ஸரியாய் பொயிடணுமாம். 1 அரிசிக்கு 2, $2\frac{1}{4}$ பங்கு ஜலம் சரியாப் போதும். அதெல்லாம் பெண்டுகள் பாத்துக்குவாள். நீ ஒண்ணு பண்ணு. உரெல்லாம் ஆயிடுறதா யில்லேயா பாரு. நீ அரைசசு கிண்டிருந்தியானுல் ஊர் பொம்மனுட்டிகள் எல்லாம் வந்து பார்ப்பா. அரைச்சும்பிடுவாள். நன்ன விவரமாய் எலைாம், அவாளுக்குச் சொல்லு. அவாளும் பிழைச்சுப் போகட்டும்.


இதிலே கொஞ்சம்கூலிகூட மிஞ்சும். 4 ரூபாயாவது மீரும். காய்கறியிலே 10 அல்லது ரூ. 12 குறையும். கொஞ்சம் கொஞ்சுமா பார்த்தாக்கூட தேவலியே தெரியறது விஷயம், அப்பறம் சொல்லுங்கோ!"

"அப்பறம் சொல்றேன். நீங்கள் எல்லாரும்தான் இந்த திண்ணேயிலே ராத்திரி சேர்ரிளே-எல்லாம் சொல்றேன்."

"உங்களுக்கு இதெல்லாம் எப்படி தெரிஞ்சுது?"

"இந்தமாதிரி பாழ் கிராமங்களேயும் பார்த்திருக்கிறேன். அதிலே யிருக்கிறவன் எல்லாம் கடைசியிலே கூட்டம் கூட்டமா திருட தலேப்பட்டு விட்டார்கள். தேசமே தொந்தறவாய் போச்சு. அப்போ அவாள்கிட்ட பழகினேன். கேட்டுக்கொண்டு பிடிச்சுதானு செய்யுங்கள். எல்லா விவரமும் கொஞ்சம் கொஞ்சமாக சொல்றேன்."

---




ஹோட்டலுக்கு சாப்பிட வந்தவர்:—(சாதத்திலிருந்த கற்களேப்பொறுக்கி எடுத்து) ஹோட்டல் ஐயரைப் பார்த்து "ஓய் என்னங்காணும் இது. சாதமெல்லாம் ஒரே கல்லாக் கிடக்கரதே, நல்ல ஹோட்டலய்யா இது!

ஹோட்டல் ஐயர்:—என் ஸ்வாமி, நீர் கொடுக்கப்போரமூணணுக்காசுக்கு, சாத்லே நவரத்னங்கள் கிடக்கும்னு நினேச்சுண்டீரோ!

# இலங்கையில் நில உடைமை

"இலங்கையர்கோன்"

நாம் ராமாயணத்தில்தான் முதல் முதலாக இலங்கையைப் பற்றிக் கேள்விப்படுகிறோம். ராமாயண காலம் சரித்திர காலத்திற்கு மிகவும் அப்பாற்பட்டது. ஆனல் இந்த ஒரு காரணத்தைக் கொண்டு ராமாயணத்தில் இலங்கையைப் பற்றிக் கூறப்படும் வரலாற்றை உண்மை யற்றது என்று தள்ளி விடவும் முடியாது.

"இலங்கை" என்ற பெயரையும் "ராவணன்" என்ற பெயரையும் சூழ்ந்திருக்கும் கவிதா கற்பனைகளை உதறித் தள்ளிவிட்டுப் பார்த்தால் இலங்கை இயற்கை வளங்களும் செல்வமும் மலிந்த ஒரு தீவு என்பதும், ராவணன் பலமும் செல்வாக்கும் நிறைந்த ஒரு சக்கரவர்த்தி என்பதும் பெறப்படும். இலங்கை முழுவதற்கும் ராவணன் இறைவனுக இருந்தான்—இலங்கையின் சொந்தக்காரன் என்று கூடச் சொல்லி விடலாம். அவனுடைய தனி நாயக ஆட்சியில் தனி உடைமை என்ற கொள்கைக்கு இடம் இருந்திருக்க முடியாது. அவனுடைய பிரஜைகள் இலங்கையில் வாழ்ந்து வந்தார்கள், அவ்வளவு தான். அவர்களுக்குத் தனி உடைமைச் சுதந்தரம் கிடையாது. நிலத்தில் ஒவ்வொரு பொட்டும் ராவணேசுவரனுக்குச் சொந்தமானது. பிரஜைகள் குடித்தனக்காரர்கள் மாதிரித்தான். நிலத்தை விற்கவோ, நன்கொடையாகக் கொடுக்கவோ, அல்லது ஒற்றி வைக்கவோ அவர்களுக்கு உரிமை இல்லே. அவர்கள் இறந்தவுடன் அவர்கள் உபயோகித்த நிலம் பழையபடி அரசனுக்குச் சொந்தமாகிவிடும். பிள்ளைகளுக்குப் போவதா யிருந்தால் அரசனுடைய சம்மதத்தோடுதான் போகவேண்டும். மேலே கூறியவைக்கு ஆதாரம் ஒன்றுமே கிடையாது. ராமாயணத்தில் வரும் ராவண ஆட்சியின் வர்ணனையைக் கொண்டு ஊகித்ததுதான்.

ராவணனுடைய மகத்தான சாம்ராஜ்யம் அழிந்து போனவுடன், இலங்கையும் பாழடையத் தொடங்கியது. நகரங்கள் மறைந்து பாழ்மை தோன்றியது. செல்வம் கொழித்த நாடுகள் மறைந்து காடுகள் தோன்றின. ஜனத்தொகையும் அருகி வரலாயிற்று. இந்த மாறுதல் நடந்து முடிய பல நூற்றுண்டுகள் சென்றிருக்க வேண்டும். கால தேவனின் கொடிய கோடரி, உன்னதமான நிலையிலிருந்த ஒரு பெரிய ராசாங்கத்தை வேரறுத்து விட்டது.

பிறகு கி. மு. ஆறும் நூற்றுண்டளவில் இலங்கையைப் பற்றிக் கேள்விப்படுகின்றோம். அப்பொழுது யக்கர், நாகர் என்று இரு சாதியார்கள், இலங்கையின் சில சில பாகங்களில் வாழ்ந்து வந்தார்கள் என்று கூறப்படுகின்றது. அவர்கள் ராவணனுடைய பிரஜைகளின் வழித் தோன்றல்கள் என்றும் கூறப்படுகிறது. அழிந்து பாழாய்ப்போன ஒரு உயர்ந்த நாகரீகத்தின் பரிதாபகரமான பிரதிநிதிகளாய் விளங்கிய இவர்களிடத்தில் என்ன நில உடைமைக் கொள்கை இருந்திருக்கப் போகிறது! சட்டம், உரிமை, வழமை முதலிய எதுவுமின்றி, புதையல் கண்டெடுத்தவன் அப் புதையலைத் தானே அனுபவிப்பது போல, அவர்களும் தாம் தாம் பிடித்துக் கொண்ட நிலத்தைத் தாமே வைத்து அனுபவித்து வந்தார்கள். இந்தக் கூற்றிற்கும் ஆதாரம் இல்லை.

இலங்கைக்கு விஜயனும் அவன் பரிவாரங்களும் வந்து சேர்ந்த பொழுதுதான் இலங்கைச் சரித்திரம் ஆரம்பமாகிறது. இலங்கையில் அவனில் இருந்துதான் சிங்கள ராச்சியம் ஆரம்ப மாகிறது. அவனும் அவனுடைய சகாக்களும் இலங்கையில் குடியேறி "காடு கெடுத்து நாடாக்கி குளம் தொட்டு வளம் பெருக்கி" ஒரு ராஜ்யம் அல்லது ஒரு நாகரீகம் என்று சொல்லக்கூடியதொன்றை நிறுவ பல ஆண்டுகள் சென்றன. கி. மு. மூன்றும் நூற்றுண்டில், தேவநம்பியதீசன் என்ற அரசனுடைய ஆட்சிக் காலத்தில் புத்த மதம் இலங்கையில் ஸ்தாபிக்கப்பட்டது. அதன்பிறகு நில உடைமைக் கொள்கையில் ஒரு பெரிய மாறுதல் ஏற்பட்டது.

தேவநம்பியதீசனும் அவனுக்குப் பிறகு இலங்கையை ஆண்ட வேறு பல அரசர்களும் பல புத்த விகாரைகளேயும் பான்சாலைகளேயும் தோற்றுவித்து அவற்றிற்குப் பல ஊர்களை நன்கொடையாகக் கொடுத்தனர். அக் காரணத்தினல், பண்படுத்தப்பட்ட நிலங்களில் மூன்றில் ஒரு பங்கு புத்த குருமார்களின் கைகளில் சிக்கிப்போய் இருந்தது. அரசனுக்குச் சொந்தமான ஊர்களும் பல இருந்தன. மிகுதியாயிருந்த நிலங்கள்தான் பிரஜைகளுக்குச் சொந்தமானவை.

இலங்கையின் நில உடைமைக் கொள்கை மலையாளத்தில் வழங்கிய கொள்கையைப் பின்

பற்றியதாகும். அந்தக் கொள்கைக்கு உடையவன் ஆள்பவன் என இரு பகுதியார் தேவை. அதாவது காணிச் சொந்தக்காரன் தானாக அக் காணியை அனுபவிப்பதுபோக, அதிகமாக இன்னொருவனுக்குத் தான் அனுபவிக்கக் கொடுப்பான்.

புத்த குருமார்களால் விகாரைகளுக்குச் சொந்தமான காணிகளை ஒன்றும் செய்து கொள்ள முடியாது. அவற்றை வேறு யாருக்காவது பண்படுத்தக் கொடுக்க வேண்டும். காணியை ஆள்பவன் ("குடின்") அக் காணியில் வரும் வருவாயில் ஒரு பகுதியை விகாரைகளுக்குக் கொடுத்துவிட வேண்டும். அந்த ஒப்பந்தத்திற்கு "கெர" என்று பெயர். தொடக்கத்தில் ஆட்சிக்காரன் இறந்தால் அக் காணியின் ஆட்சி அவனுடைய பிள்ளைக்குப் போவதில்லை, காணி உடையவனுக்கே திரும்பி வந்து விடும். ஆனால் பத்தாம் நூற்றாண்டளவில் ஆட்சி பிள்ளைக்குப் போகத் தொடங்கியது. அது தொடங்கியது சிறு விவசாயியிடமிருந்துதான். ஏன் என்றால், அப்படிப்பட்ட சிறியவர்களை காணிக்கு உடையவனாகிய விகாரையோ அல்லது பிரபுக்களோ தம் கவனத்தில் எடுக்காததுதான்; அவனுடைய ஆட்சி உரிமை அவனுடைய பிள்ளைக்குப் போவதையும் அந்த முதலாளிகள் கவனிக்கவில்லை. ஆனால் நாளடைவில் இந்த வழக்கம் எல்லா ஆட்சிக்காரர்களுக்கும் பரவி விட்டது.

அரசனுக்குச் சொந்தமான காணியா யிருந்தால், ஆட்சிக்காரன் அரசனுக்குச் சம்பளமில்லா ஊழியம் செய்ய வேண்டும். ஊழியம் செய்யத் தவறினால் காணி பறிமுதல் செய்யப்படும்.

இவைகளைவிட, "கம்பட்ட" என்று அழைக்கப்பட்ட இன்னொரு விதமான நில உடைமை இருந்தது. இதில் காணி ஆள்பவன், வருவாயில் ஒரு பங்கு கொடுக்கவோ அல்லது ஊழியம் செய்யவோ வேண்டியதில்லை. ஆட்சிக்காக அரசனுக்கு ஒரு வரி செலுத்த வேண்டும் அவ்வளவுதான். இதனிலும் பார்க்க மேலான இருவகை நில உடைமைகள் "பமுன" என்றும் "உக்காஸ்" என்றும் அழைக்கப்பட்டு வந்தன.

"பமுன"வாவது விகாரைகளுக்கும், தர்ம சாதனங்களுக்கும், கிராமத் தலைவர்களுக்கும், அரசனாலோ அல்லது உப அரசனாலோ ராஜங்கமுத்திரையின் கீழ் கொடுக்கப்படுவதாகும். கிராமத் தலைவர்களுக்கு கொடுக்கப்பட்ட விடத்து அவர்கள், ஏதாவதொரு விகாரைக்கு தினந்தோறும் அல்லது வாரந்தோறும் எண்ணெய் கொடுக்கவேண்டும். இது ஒரு வரியாகக் கருதப்பட்டது. பமுன உடைமைக் காரனுக்கு தன் காணியை விற்கவும், நன் கொடையாகக் கொடுக்கவும், ஒத்தி வைக்கவும். தன் மரணத்தின் பின் தன் பிள்ளைகளுக்கு விடவும் உரிமை உண்டு.

"உக்காஸ்" என்ற உடைமைக்கும் தற்காலத்திய ஒற்றிக்கும் சிறிது ஒற்றுமை காணப்படுகிறது. அக்காலத்தில் காணியை முற்றாக விற்றுவிடுதல் அவமானமென்று கருதப்பட்டது. ஆதலால் பணம் தேவையானவன் தன் காணியை பணம் கொடுப்பவனிடம் அடகு வைக்கிறான். கடன் கொடுப்பவன் அதை தனது போல் அனுபவிக்கலாம். ஆனால் அதை விற்கவோ ஒற்றிவைக்கவோ முடியாது. கடன்காரன் பணத்தைத் திருப்பிக் கொடுத்தவுடன், காணியை அவன் பெயருக்கு மாற்றிவிட வேண்டும்—எவ்வளவு காலம் சென்றாலும் சரிதான். இந்த உக்காஸ் தான் பிற்காலத்தில் ஒற்றி (Usufructuary mortgage) ஆக மாறியதென்று கூறலாம். உக்காசில் கடன் திருப்பிக் கொடுப்பதற்குக் குறிக்கப் பட்ட தவணை இல்லை. ஒற்றியில் தவணை உண்டு. அந்தத் தவணை தவறினால் காணி கடன் கொடுத்தவனுக்குச் சொந்த மாகிவிடும். ஒற்றி சிங்களவர்களுக்கிடையில் இப்பொழுது வழங்குவதில்லை. யாழ்ப்பாணத்தில் சில இடங்களில் வழங்கப்பட்டு வருகிறது.

"சேனை" க்காணி என்றும் ஒன்று உண்டு. அதாவது, பிரஜைகளுக்கு அரசனால் நன்கொடையாகக் கொடுக்கப்படும் காட்டுக் காணி. பிரஜை "காடு கெடுத்து நாடாக்க வேண்டியது." வரி ஒன்றும் கிடையாது.

போத்துக்கேயர் காலத்தில் இலங்கையின் நில உடைமையில் வேறும் சில திருத்தங்கள் செய்யப்பட்டன. அதிகமாக, ஊர்களெல்லாம் பெரிய கம முதலாளிகளிடையே பிரிக்கப்பட்டிருந்தன. இந்த உடைமைகளை பாகஞ் செய்ய முடியாது. உடையவனுடைய மரணத்தின் பின் ஆண் சந்ததிக்குத் தான் போகும். மிகுதியாயிருந்த நிலங்கள் சிறு விவசாயிகள் வசம் இருந்தது. அவர்கள் முடிக்கு "ஒற்று" என்று அழைக்கப்பட்ட ஒரு வரி செலுத்த வேண்டும்.

முடிக்குரிய காணி (முற்றெற்று) சிலருக்கு இலவசமாகக் கொடுக்கப்பட்டன. முடிக்கு நிலத்தில் உள்ள உரிமையை நிலை நாட்ட எத்தனையோ விதம் விதமான வரிகளெல்லாம் வழங்கப்பட்டு வந்தன. உதாரணமாக, "பிம்புலுக்கு" என்ற சுடுகாட்டு வரியைக் கூறலாம். அதாவது பிணம் சுடுவதற்கு முன் நிலத்தின் கூலியாகக் கொடுக்கப்பட்ட வரி. இது முடிக்குறிய உரிமை பறி போகாமலிருக்க அர

(416-ம் பக்கம் பார்க்க)

# பொங்கல் வழிபாடு

(ஸ்ரீ. ந. பிச்சமூர்த்தி)

நீதந்த கனி இது நீதந்த கரும்பிது
நீ தந்த நெற் கதிர் இது
நீ தந்த நீர் இது நீ தந்த சீர்இது
நீ தந்த ஒளியும் இஃதே.
நீ தந்த சீரும் நீ தந்த திருவும்
நினக்கே நிவேதனம் கதிரவா,
கனகப் புரவிமேல் கடுகியே வந்திடு
கதிரவா எங்கள் கோவே....!

நீ தந்த செல்வத்தை நினக்கே நிவேதனம்
செய் பிழையாம் அறிந்தும்,
வழிவேறு வணங்கயாம்
அறியாது கூவுறோம்
கதிரவா கடுகி வருவாய்....!

நீயன்றி மண்ணுண்டோ விண்ணுண்டோ,
ஒளியுண்டோ நிலவுண்டோ
உலகுண்டோ உயிருமுண்டோ,
நானுண்டோ என்னிடம் வாழ்த்துப் பொருளுமுண்டோ?
கதிரவா கனிந்து வருவாய்....!

கரும்பு மனமும் இனிப்பாம் உயிரும்
நின்னடி வைத்து விட்டோம்.
கதிரவா ஏற்று மகிழ்வாய்,
உயர்ந்தவா! உயிரின் முதலே!

# பொங்கல் காட்சிகள்

(ஸ்ரீ கு. பா. வெங்கடாசலம்)

மார்கழி மாதப் பனியினிலே—சிலர்
மண்ணெடுத் துப்பானை செய்திடுவார்
ஏருழும் ஏழைகள் பொங்கலிட—நல்ல
'ஏனங்கள்' யாவும் கொடுப்பதற்கே.

காய்கறிச் செடிகள் பயிரிடுவார்—சிலர்
கரும்பு மஞ்சள் விளைத்திடுவார்
தாயுடன் தந்தை பிள்ளைகளும்—பல
தானிய வகைகள் சேர்த்திடுவார்.

சுத்தமாக வீட்டைப் பெருக்கிடுவார்—வெள்ளைச்
சுண்ணும்புதான் கரைத் தடித்திடுவார்
எத்தனை யோவேலையாக்கிடுவார்—'தை'
ஏந்திழை யாளை வரவேற்கவே.

கோழிகள் கூப்பிடும் நேரத்திலே—பெண்கள்
கோலத்தால் வீட்டை நிறைத்துவைப்பார்
மேழியால் ஓங்கிய செல்வங்களை—மக்கள்
விரும்பியே தேவர்க்குப் படைத்துவைப்பார்.

'என்றைக்கு மிப்படி வைத்திடுவாய்—எங்கள்
ஏழைமை தன்னைத் தகர்த்திடுவாய்'
என்று வணங்கிப் புதுப்பானையை—யடுப்
பேற்றிப் புதுப்பொங்க விட்டிடுவாள்.

ஓலைச் சருகில்தீ மூட்டிடவே—அவள்
உள்ளத்தின் வளமைக் கனல்தாவி
பாலினைப் பொங்கிடச் செய்துவிடும்—அதைப்
பார்த்துநின் றோர்கள் குலவைசெய்வார்.

வருடம் முழுவதும் பாடுபட்டே—அன்று
வயிறு நிறைய உணவைஉண்டு
தருமங்கள் பற்பல செய்துவிட்டுப்—பூமி
தழைத்து வளம்பெற வேண்டுமென்பார்.

எப்பொழு தும்'தைப்' பிறப்பாகவே—இங்கே
இருந்திடி னென்ன கெடுதிவரும்
எப்பொழுது மந்த நிலைவரலாம்—எல்லா
ஏற்றமும் மேழியின் பெருக்கமன்றோ!

# பொங்கலும் கிராமமும்

(ஸ்ரீ. எஸ். சத்தியமூர்த்தி, எம். எல். ஏ.)

தேசத்தின் முன்னேற்றத்திற்காகவும் சிறப்பாக தமிழ்நாட்டின் முன்னேற்றத் திற்காகவும் நண்பர் ஸ்ரீ. கே. எஸ். வெங்கட ரமணி அவர்கள் செய்துவரும் வேலையை —முக்கியமாக அவர் பிரசுரித்து வரும் 'பாரத மணி'ப் பத்திரிகையை—நான் மிக வும் பாராட்டுகிறேன். அதற்கறிகுறியாக இச் சிறு கட்டுரையை அப் பத்திரிகை யின் பொங்கல் முத்துக்கு சந்தோஷமாய் அனுப்புகிறேன்.

நம் நாட்டில் முன் நாளில்—வெகு நாளைக்கு முன் அல்ல, கொஞ்ச நாள் முன் வரையிலும்—பொங்கல் பண்டிகை மிக வும் சிறப்பாகவும் சந்தோஷமாகவும், முக் கியமாக கிராமங்களில், கொண்டாடப்பட்டு வந்தது. அதற்குக் காரணம் நாட்டில் நீர் வளமும் நிலவளமும் பெருகி நவதான்யங் களும் நன்றாய் விளைந்து சாப்பாட்டுக்கில் லாத ஏழை ஒருவன் என்பதுகூட இல்லா மல் பொதுவாக ஜனங்கள் எல்லோரும் வயிராற உண்டு உடுத்துவதற்குச் சாதனங் கள் இருந்துவந்தன.

இப்பொழுது காலம் அடியோடு மாறி விட்டது. நாம் இன்று பொங்கல் பண் டிகை கொண்டாடும்போது நகரங்களில் சுமாராய் நடக்கின்றது. கிராமங்களில் பண் டிகை கொண்டாடப்பட்டாலும் தகுந்த செழிப்பும் ஐசுவர்யமும் இல்லாததால் முன்னிருந்த சோபையும் சந்தோஷமும் கிடையாது.

அதை நாம் மறுபடியும் உண்டாக்க வேண்டியது நம் கடமை. நம் நாட்டில் 7 லக்ஷம் கிராமங்கள் இருக்கின்றன. அதில் சுமார் நம் மக்கள் 100-க்கு 90 பேர் வசிக்கின்றார்கள். ஆனால் வெகுவாக அக் கிராமங்கள் பல வகைகளில் அழிந்து போயிருக்கின்றன. அது பணக் குறை வால் மாத்திரம் அல்ல. மனிதத் தன்மை யும் குறைந்திருக்கின்றது.

இந்தவேலையை நன்றாய் செய்யவேண்டு மென்று தன் முழு சக்தியுடன் ஒவ்வொரு நாளும் 24 மணி உழைப்பவர் மகாத்மா காந்தி. அவர் சர்க்காவைப் பிரபலப்படுத் துவதன் நோக்கம் அதுதான். அம்மட்டு மல்ல. கிராமக் கைத்தொழில் அபிவிரு த்தியிலும் பரிபூரண சிரத்தை காட்டி வருகின்றார். அதனுடைய முக்கியமான நோக்கத்தை நன்றாக அறிந்து நாமும் நம் தமிழ் நாட்டில் நம்முடைய கிராமங்களை உஜ்ஜீவிக்கச் செய்ய வேண்டும்.

இதற்கு சுலபம் என்று தோன்று கிற வழியை பல பேர்கள் சொல்லி வரு கின்றார்கள். அதாவது படித்தவர்களெல் லோரும் கிராமங்களில்போய் வசிக்கவேண் டுமென்று சொல்லுகிறார்கள். சிலர் தன் மறுப்புள்ளார் அவ்வாறு செய்யலாம். ஆனால் போதுமான பலர் அவ்வாறு செய்வ தற்குமுன் கிராமங்களை நாம் சீர்திருத்தம் செய்து கிராம வாழ்க்கையின் முக்கிய அம்சங்களைப் பாதுகாத்து நவீன நாகரீக சௌகரியங்களை அங்கே ஏற்படுத்த முயல வேண்டும்.

முக்கியமாக, கிராமங்களிலுள்ள ஜனங் களுக்குப் பசியின்றி சாப்பிட வசதிகள் செய்ய வேண்டும். அவர்கள் விவசாயத்தை அபிவிருத்தி செய்ய வேண்டும். விவ சாயப் பொருள்களுக்கு போதுமான விலை, பணத்தாலோ அல்லது மற்ற சாமான் களிலோ அவர்களுக்கு கிடைக்கும்படி செய்ய வேண்டும். அவர்கள் விவசாய வேலையில் ஈடுபட்டிருக்காத சமயத்தில் மற்ற கைத்தொழில் குடிசைத் தொழில் செய்யும்படி சாதனங்கள் செய்ய வேண் டும். அத் தொழிலால் உற்பத்தி செய் யும் சாமான்களை மற்ற கிராமத்தார் வாங் கும்படி செய்யவேண்டும். இப்படி பரஸ் பரம் கிராமங்களுக்குள் சாமான்களைச் செய்து விற்று வாங்கி நடத்தும் பொரு ளாதார முறை நம் நாட்டில் ஏற்படவேண் டும்.

அப்படி ஏற்பட்டு விட்டால் கிராமங்க ளில் தெருக்களும் வீடுகளும் சுத்தமாகும். மனிதர்கள் வசிப்பதற்கு அருகதை உள் ளவையாகும். நல்ல ரஸ்தாக்களும் பள்

(413-ம் பக்கம் பார்க்க.)

# தைக் கதிர்

(ஸ்ரீ. கி. வா. ஜகந்நாதன்)

இன்று தை மாதம் பிறக்கிறது. தமிழ் நாடு முழுவதும் 'பால் பொங்கிற்று?' என்று கேட்டு மகிழ்வெய்தும் தினம். இந்தப் பொங்கற் புது நாள் நிலமகள் தந்த பயனைப் பாராட்டுந் திருநாள்; உழவன் உழுது அறுவடை செய்ததை உண்ணும் திருநாள். இன்று புதுப் பானையிலே புதிய தானியத்தால் ஆக்கிய பொங்கலைப் புதிதாக உண்ணும் புது நாள்.

புதிதுண்ணலென்று பொங்கல் விருந்தைக் கூறுவது தமிழர் சம்பிரதாயம். நெற்றி வேர்வை நிலத்தில் விழப் பாடுபட்ட உழவன் தெய்வத்துக்கு நிவேதனம் செய்த அன்னத்தை உண்கின்றான். இந்த வழக்கம் தமிழ் நாட்டில் இரண்டாயிரம் வருஷத்திற்கு முன்பு கூட இருந்தது.

* * * *

மலை நாட்டிலே குறவர்கள் மரங்களை வெட்டி எரித்துவிட்டு அங்கே தினை விதைத்துப் பயிரிடுவார்கள். குறமகளிர் அத்தினைப்புனத்தைக் காவல் புரிவார்கள். தினைப்பயிர் வளரும்போது அவர்களுடைய காதற் பயிரும் வளர்ந்து வரும்.

தினையறுத்த பின்பு அதன் முதற் கதிரைக் குறவர்கள் தங்கள் தெய்வத்திற்குச் சமர்ப்பிப்பார்கள். புதிய பொருள்களையெல்லாம் முருகனுக்கு அர்ப்பணம் செய்துவிட்டுப் பின்பே தாங்கள் நுகர்வார்கள். இப்படிப் புதியதை முதலில் உண்ணும் முருகக் கடவுளை ஒரு புலவர் 'கடியுண்கடவுள்' என்று கூறுகின்றார். கடியென்பது புதுமையைக் குறிக்கும் சொல்.

* * * *

தலைவி நாயகனது வரவை எதிர் நோக்கி நோக்கித் தளருகின்றாள். அவன் தினைப் புனங் காத்துவந்த காலத்திலெல்லாம் அவனை இடைவிடாது சந்தித்துக் காதற் பயிரை வளர்த்து வந்தாள். தினைக்கதிர் விளைந்தது அவள் காதலுக்குக் கேடாக முடிந்தது. அவள் வீட்டிற்கு வந்துவிட்டாள். அவனும் முன் போல எளிதிலே வந்து பழக முடியவில்லை. 'தெரியாமலல்லவா நாம் இந்தச் சங்கடத்திலே மாட்டிக் கொண்டோம்!' என்று அவள் மிகவும் வருந்துகிறாள். ஆனாலும் உயிரோடு தொடர்புடைய நட்பல்லவா அது? அதை மாற்ற முடியுமா?

தைப் பொங்கல். குறிஞ்சி நிலத்தார் முருகனை வழிபட்டுப் பொங்கல் போடுகின்றனர். அறுத்த தினைக் கதிரைக் கொத்தாகக் கட்டிக் கோவிலிலே தொங்கவிடுகின்றார்கள். பொன்போல் நிறம் பெற்ற அக் கதிர்களை முருகன் சந்நிதியிலே வைத்து, "அப்பா, சாமீ, நீ தந்த செல்வம் இது. எங்களுக்கு வயிறு நிறைய நீ தந்த பொன் போன்ற தினை இது. உனக்கே முதலில் அர்ப்பணம்!" என்று வணங்குகிறார்கள்.

முருகன் சந்நிதானத்திலே வளரும் மயில் அந்தத் தினைக் கதிரைக் கொத்துகிறது. அதைத் தன் அலகிற் பிடித்து உதறுகின்றது; அதன் உடம்பெல்லாம் ஒரே நடுக்கம். அந்தப் பறவைக்கு அது ஸ்வபாவம். ஆனால் குறவர்கள் அதற்கு வேறு பொருள் கற்பிக்கிறார்கள்: 'இந்த மயில் சாமியின் நிவேதனத்தைக் கொத்துகின்கிறது. அதனால் இது நடுங்குகிறது. பாவம்! மற்றக் கதிரென்று நினைத்து உண்ணத் தொடங்கி இப்போது அவஸ்தைப் படுகிறது. தெய்வத்துக்கு அபசாரம் செய்தால் இப்படித்தான்' என்று அவர்கள் பேசிக்கொள்கிறார்கள்.

ஒரு மூலையில் நிற்கும் தலைவியும் அவளுடைய தோழியும் இதைக் கேட்கிறார்கள். தலைவியின் முகம் சிறிதே வாடுகிறது. தன் நிலையையும் அந்த மயிலின் நிலையையும் ஒன்றாக நினைக்கிறாள்: 'ஆம்! நானும் இப்படித்தான் தெரியாமல் ஒரு காரியத்தைச் செய்துவிட்டுத் திண்டாடி நடுங்குகின்றேன்' என்று புழுங்குகிறாள். தோழிக்கும் சொல்கிறாள், அந்த மலைநாட்டுத் தலைவனுடைய காதல் ஒரு காலத்தில் இன்பத்துக்குக் காரணமாக இருந்தது இப்போது நீர்மலி கண்ணோடு ஸதா அவனை நினைக்கும் நிலைக்குக் கொண்டு வந்துவிட்டது என்று அவள் நைந்து சாம்புகிறாள். மற்றவர்களுக்கெல்லாம் இன்பத்தை உண்டாக்கும் தைக் கதிர் அவ

ளுக்குத் துன்பத்தை உண்டாக்கக் காரண மாயிற்று.

*   *   *   *

இந்தக் காட்சியை வருணிக்கும் செய்யு ளொன்று பெரும் புலவராகிய நக்கீரரால் இயற்றப்பெற்றது. அது குறுந்தொகை என்னும் சங்க நூலின் 105-ஆம் பாட லாக அமைந்திருக்கின்றது.

குறிஞ்சி நிலத்தார் கடியுண் கடவு ளாகக் குமரக் கடவுளை வழிபட்டனர். இன்று நாம் தைப் பொங்கலை மகர சங்க ராந்தி யென்னும் திருநாளாக்கிச் சச்யாதி பதியாகிய சந்திரனையும் உத்தராயணத் தொடக்கம் செய்யும் சூரியனையும் வழிபடு கின்றோம்.

கதி ரென்பது தானியக் கதிருக்கும் பெயர்; சூரியனுக்கும் பெயர். தைக் கதி ரால் தைக் கதிரோனை வணங்கும் பொங் கற் புது நாள் தமிழகத்திற் புதுமை யின் பத்தை விளைப்பதாகுக!

---

(411-ம் பக்கம்—தொடர்ச்சி)

ளிக்கூடங்களும், ஆஸ்பத்திரிகளும், ரேடியோ மூலம் சந்தோஷமும் அறிவை அடையும் சாதனங்களும், கைத்தொழில் களுக்குப் போதுமான அளவு மின்சார சக்தியும் கிடைக்குமாறு செய்யலாம். இம் மாதிரி செய்து விட்டால் படித்தவர்கள் எல்லோரும் ஒருவித தூண்டுதலு மில்லா மல்தாங்களே கிராமத்துக்கேசெல்வார்கள். கிராமங்களில் மறுபடியும் சந்தோஷம் விளங்கும்.

இக் காரியத்தில் பொது மக்களும், சிறப் பாக அரசியல் வாதிகளும் போதுமான சிரத்தையுடனும் பணத்துடனும் ஒரு 10 வருஷங்களுக்குள் செய்துவிடவேண்டு மென்று கங்கணம் கட்டிக்கொண்டு வேலை செய்ய முன்வரவேண்டும். இப்படிச் செய்ய வேண்டிய முக்கிய வேலையின் அவ சியத்தை அடிக்கடி நன்றாக எடுத்துக்காட் டும் 'பாரத மணி'ப் பத்திரிகை வெகு நாளைக்கு உத்சாகத்துடன் வேலை செய்து நம் தமிழ்நாடு புத்துயிர் பெற்று விளங்க உதவி புரிந்துவர வேண்டுமென்று எல் லாம் வல்ல இறைவனை முழு மனதுடன் பிரார்த்திக்கிறேன்.

---

"உயிர் போனாலும் இலவசத் தீனியை விடமாட்டேன். இந்த ஜன்மம் போனால் நூறு ஜன்மங்கள் உண்டு. போன இலவசத்தீனி மறுபடியும் திரும்புமா?"

என்ற கொள்கையை யுடைய கௌண்டின்யனது வரலாற்றை சில்பஸ்ரீ யின் முதல் பகுதியான பொங்கல் இதழில் வந்துள்ள 'அவல் நாடக'த்தில் காணுங்கள்.

தவிரவும் 'கதைக் கடலி'ருந்து ரஸமான கதைத் தொடர்களும், கற்பனா ரூபமான புதுக் கதைகளும், சிறு நாடகங்களும், பரிஹாஸக் கட்டுரைகளும், தேவார திவ்யப் பிரபந்தங்களின் ஸாரங்களும், அனுஷ்டான ரஹஸ்யங் களும், கீதம், சிற்பம், நாட்டியம் முதலிய கலைகளை விவரிக்கும் ஆராய்ச்சி களும் 'சில்பஸ்ரீ'யில் ஒவ்வொரு மாதமும் படித்தின்புறலாம்.

நீங்கள் ஒவ்வொருவரும் சந்தாதாரராகி, தமிழ் மொழியையும், தமிழ்க் கலைகளையும் விருத்தி செய்யுங்கள். இன்றே முந்துங்கள்.

**வருஷ சந்தா ரூ. 4—0—0**

**சில்பஸ்ரீ காரியாலயம்,**

**5, லஜ், மயிலாப்பூர், சென்னை.**

# "வெள்ளைக் காரச்சி"

(ஸ்ரீ. கு. ப. ராஜகோபாலன்)

பொங்கல் என்றால் எனக்கு அவள் ஞாபகம்தான் வருகிறது.

மாட்டுப் பொங்கலின்போது 'வெள்ளைக் காரச்சி' பிறந்து பத்து நாள்தான் ஆகியிருந்தது; என்றாலும் அவளுடைய குதிப்பிலும் ஓட்டத்திலும் நல்ல, தெம்பும் துள்ளலும் இருந்தது. ஒரு வேளைப் பால் பூராவும் அவளுக்குத்தான்; கேட்பானேன்?

என் தாயாருக்கு அவளிடத்தில் வெகுப் பிரியம். தொட்டுத் தொட்டு வளர்த்தாள். தினமும் கஞ்சி தவறாமல் புகட்டுவாள். நானும் பள்ளிக்கூட நேரம் போக பாக்கி பொழுது பூராவும் அவளுடன்தான் கழிப்பேன். என் தங்கை அவளுக்குக் கழுத்தில் மாலையெல்லாம் கட்டிப்போடுவாள். அவளுடைய முகத்தில் பால் வாசனை அடிக்கும். சதா அவளை முத்தமிட்டுக் கொண்டே இருப்பேன்.

'வெள்ளைக்காரச்சி' என்று அம்மா தான் பெயர் வைத்தாள். அவ்வளவு வெண்மையாக இருந்தது அவள் நிறம். நிலவில் நிறுத்திப் பார்க்கவேண்டும் அவள் அழகை.

அன்று பூராவும் உத்சாகம் எனக்குத் தலை தெரியவில்லை. கடையில் போய் சிகப்பு பச்சை வர்ணம் வாங்கிக்கொண்டு வந்து எண்ணெய்யில் கறைத்து வைத்துக் கொண்டேன். மாட்டுக்காரப் பையன் பத்து மணிக்கு வந்து மீனாக்ஷியையும் 'வெள்ளைக்காரச்சி'யையும் வாய்க்காலுக்குக் குளிப்பாட்டக் கொண்டுபோனான். நானும் கூடப் போனேன்.

குளிப்பாட்டின பிறகு உடம்பில் மஞ்சள் பூசி நெற்றியில் குங்குமம் வைத்தோம். மீனாக்ஷியின் கொம்புகளில் வர்ணத்தைப் பூசினோம். சாயந்திரம் எப்பொழுது ஆகுமென்று துடித்துக்கொண்டிருந்தோம் நானும் என் தங்கையும்.

விளக்கு வைக்கிற நேரம். அன்று மாடுகள் மேயப் போகவில்லை. அம்மா கட்டுத்துறையை அலம்பி கோலமிட்டு செம்மண் பூசிவைத்திருந்தாள். மீனாக்ஷிக்குக்கூட அன்று ஏதோ விசேஷமென்று தெரிந்துவிட்டது. கட்டுத்துறையில் அவளுக்கு நிலை கொள்ளவில்லை. 'உம், உம்!' என்று கொண்டு காதுகளைக் கூட்டி எங்களைப் பார்த்த வண்ணமாக இருந்தாள். பொங்கல் வாசனை அவளுக்குத் தெரிந்துவிட்டது.

அம்மா பொங்கலை ஒரு தட்டில் மீனாக்ஷிக்கும் மற்றொரு தட்டில் வெள்ளைக் காரச்சிக்குமாகக் கொண்டுவந்து தூரத்தில் வைத்துவிட்டு இருவருக்கும் தலையிலும் கழுத்திலும் பூசூட்டி பூஜை பண்ணினாள். சாம்பிராணி, கல்பூரமெல்லாம் காட்டினாள். ஆனால் மீனாக்ஷிக்கு அதில் எல்லாம் கவனம் செல்லவில்லை. தட்டிலிருந்த பொங்கலைப் பார்த்து சுற்றிச் சுற்றி வந்தாள். அம்மா அவளைத் தொட்டு கண்ணில் ஒற்றிக்கொண்டு விட்டு பொங்கல் தட்டை அவள் முன் வைத்தாள். வெள்ளைக்காரச்சிக்கு நன்றாகத் தின்னத் தெரியவில்லை.

நானும் என் தங்கையும் தட்டுகள் வைத்துக்கொண்டு குச்சியால் தட்டி "பொங்கலோ பொங்கல்!" என்று கத்தினோம்.

எங்கள் குரல்களும் ஊரிலிருந்து கிளம்பிய மற்ற குரல்களுடன் கலந்து அந்த அந்திநேரத்து மூச்சுக் காற்றில் கலந்தன.

இன்று போலிருக்கிறது! அந்த இருள் வரும் வேளையும் பொங்கல் கூற்றும் அந்த மாடும் கன்றும் என் கண் முன் நிற்கின்றன!

வெள்ளைக்காரச்சி பெரியவளாகி எங்கோ பால் கொடுத்துக்கொண்டிருக்கிறாள். கொம்பு முளைக்காத அவள் கன்று முகத்தை உயிர் உள்ளளவும் நான் மறக்க முடியாது.

# விமர்சனம்

## சில்பஸ்ரீ

ஆசிரியர்: கா. வெ. ராமசந்திரன். மைலாப்பூர் சென்னை. தனிப் பிரதி 6 அணா. வருஷசந்தா ரூ. 4. (மாத பத்திரிகை)

கலை விமர்சகரான ஸ்ரீ. க. வெ. ராமசந்திரன் அவர்களை ஆசிரியராகக் கொண்ட சில்பஸ்ரீயின் முதல் தோற்றமாகிய தைப் பகுதியே கலை அபிமானிகளுக்கு ஒரு பெரும் விருந்தாக இருக்கிறது.

கவிதா விமர்சம், புதுக்கல்பனைகள், அனுஷ்டானப்பகுதி, மொழிபெயர்ப்புப் பகுதி, நிருபம், கீதப்பகுதி, சில்பப்பகுதி, நாட்டியப்பகுதி, சித்திரப்பகுதி, புஸ்தக விமர்சனம், பத்திரிகாசிரியர் குறிப்புகள் என்று பல பிரிவுகளின் கீழ் சிறந்த விஷயங்கள் வெளிவந்திருக்கின்றன.

சில்பஸ்ரீ கலை அபிவிருத்தி என்ற சிறந்த நோக்கத்துடன் வெளி வருகிறது. சில்பஸ்ரீ என்ற பெயரின் பொருளைப்பற்றியும், பத்திரிகையின் நோக்கங்களைப்பற்றியும், அதன் பல பகுதிகளின் விஷயங்களைப்பற்றியும் ஆசிரியர் விரிவாகக் கூறியிருக்கிறார்.

ஸ்ரீ சேதுப் பிள்ளை, ஸ்ரீ. ய. மகாலிங்க சாஸ்திரிகள், டாக்டர் வெ. ராகவன், ஸ்ரீ. கா. வெ. ராமச்சந்திரன் முதலியவர்கள் விஷயதானம் செய்திருக்கிறார்கள்.

சில்பஸ்ரீயின் உயர்ந்த நோக்கங்களை நாம் போற்றுகிறோம்; தனது வேலையில் சிறந்து வெற்றிபெற வேண்டுமென்று வேண்டுகிறோம்.

## சந்தனக் காவடி

தி. ஜ. ர. எழுதியது (விலை அணா 8) ஹனுமான் ஆபீஸ், சென்னை.

வங்காளத்துக்கு அடுத்தபடியாக தமிழ் நாடு சிறு கதை உற்பத்தியில். தமிழ் நாட்டில் தற்காலம் சிறந்த சிறு கதை எழுத்தாளர்கள் பலர் இருக்கிறார்கள். தி. ஜ. ர. ஒருவர்.

அவர்கள் கதைகள் பெருவாரியானவை இன்னும் புத்தக உருவில் வரவில்லை. 'கல்கி'க்குப் பிறகு தி. ஜ. ர. தான் முதல் முதலாக தனது சிறு கதைகளை ஒரு புத்தகமாகத் திரட்டியிருக்கிறார்.

'பைத்தியக்காரி' என்னும் கதையில் தி. ஜ. ர. தனது உணர்ச்சிச் சித்திர சக்தியைக் காண்பித்திருக்கிறார். 'கன்னியின் பிரார்த்தனை' ஹாஸ்யச் சுவை ததும்பும் வெகு ஸ்வாரஸ்யமான கதை. 'சங்கு மோதிரம்' புத்தகத்தின் சிறந்த கதைகளில் ஒன்று.

நமது நாட்டு வாழ்க்கையின் அழகான அம்சங்களை ஆராய்ந்து இனிய நடையில் சித்திரங்கள் சிருஷ்டி செய்யும் சக்தி பெற்றவர் தி. ஜ. ர. என்பதற்கு இந்தப் புத்தகத்தில் பரிபூரண அத்தாட்சி இருக்கிறது.

மேலும் மேலும் இதே மாதிரி சிறு கதைகள் எழுதி தி. ஜ. ர. தமிழ் இலக்கியத்திற்கு தொண்டு புரிந்துகொண்டே இருப்பாராக!

## கிருஷ்ண லீலா

நவாப் ராஜமாணிக்கம் ராயல் தியேட்டரில் காண்பித்துவரும் "கிருஷ்ணலீலா" நன்றாயிருக்கிறதென்று நாம் சொல்ல வேண்டியதில்லை. நன்றாயில்லாவிட்டால் லட்சக் கணக்கான ஜனங்கள் போய் பார்த்திருப்பார்களா? மேலும் மேலும் தினம் கொட்டகை தாங்காமல் நாடக ரஸிகர்கள் வருவதைப் பார்க்கும்போது எவ்வளவு பேர்போன 'கிரிடிக்'காயிருந்தாலும் நாடகம் நன்றாயிருக்கிறது என்பதை ஒப்புக்கொள்ளத்தான் செய்வார்.

கிருஷ்ணலீலா பழைய கதைதான். சினிமா, நாடகம், தெருக்கூத்து எல்லாவற்றிற்கும் அபயம் கொடுத்தது இந்தப் புராணம். ஜனங்கள் கிருஷ்ணலீலா வென்றால் அலுத்துக்கூடப் போய்விட்டார்கள். "என்ன கிருஷ்ணன்? ஆமாம்! இவர்களுக்கு என்ன வேலை? வேறே நல்ல சமூகக் கதையே இவர்களுக்கு அகப்படவில்

லேயா ?'' என்று சண்டைபோடுவது வழக்கம். ஆனல் அப்படிப்பட்ட 'கிருஷ்ண லீலே'யை ராஜமாணிக்கம் கம்பெனியார் ஆடும்போது ஏன் அலுப்பேற்படவில்லே? தினமும் ஏன் ஏராளமான கூட்டம்?

இங்கேதான் இருக்கிறது விசேஷம். கதை எவ்வளவு பழசாக வேண்டுமென்ருலும் இருக்கலாம். ஆனல் கதையின் போக்கை மேடையில் ரஸமாகச் சித்தரித்துக் காட்டவேண்டும். மேனாட்டு நாடகங்களில் கதை என்று சொல்லக்கூடிய அம்சமே பூஜ்யமாயிருக்கும்; ஆனல் நாடகப் போக்குதான் முக்கியத்துவம் பெற்றிருக்கிறது.

ராஜமாணிக்கம் கம்பெனியார் கதையில் பல அழகிய சம்பாஷணைகளேயும் சம்பவங்களேயும் கொண்டுவந்து பிணைத்து இந்தப் பழைய கிருஷ்ணன் கதைக்குப் புத்துயிர் அளித்திருக்கிருர்கள். சம்பாஷணைகளில் ஹாஸ்யம் இருக்கிறது; அதனல் ஜீவன் இருக்கிறது. உதாரணமாக கம்ஸன் மந்திரியுடன் பேசுவது, கிருஷ்ணனின் தோழன் ராமன் என்ற பையன் பேசுவது-இவற்றிலெல்லாம் சம்பாஷணை எழுதியவரின் திறமையைக் காண்கிறேம். இந்த ராமன் என்ற பிள்ளேயாண்டான் நன்ருகப் பேசுகிருன். ஆனல் சில சமயங்களில் 'அதி'யாகப் போய்விட்டதை எடுத்துக் காட்டவேண்டும்.

இந்த அழகிய நாடகத்தில் நடிக்கும் சிறுவர்களே நினைத்துக்கொண்டதும் சிறிது வருத்தமேற்படுகிறது. ஆம்; இன்னும் ஐந்து வருஷங்களானபின் இவர்களெல்லாம் பெரியவர்களாகிவிடுவார்கள். அப்போது அவர்களது குழந்தை நடிப்பை நாம் காண முடியாதே என்றுதான். வயதாகிவிட்டால் அந்த பால கிருஷ்ணன் இப்போது நடித்ததுபோல் நடிக்க முடியுமா? ஆனல் வயது ஆக ஆக இன்னும் அனுபவத்தினல் நன்ருக நடிப்பார்கள்; நாடகக் கலேக்கு இன்னும் நன்ருகத் தொண்டு செய்வார்கள் என்ற நினைவுதான் நம் வருத்தத்தைப் போக்குகிறது.

இந்த நாடகத்தில் ஸீன் ஜோடனைகளேப் பார்க்கத்தான் முக்கால்வாசிப்பேர் வருகிருர்களென்ருல் அது உண்மைதான். காளிங்க நர்த்தனம், கோபிகா வஸ்திராபஹாரணம், கோவர்த்தனம் முதலிய காட்சிகள் அற்புதமா யிருக்கின்றன. இந்திர ஜால வித்தைகள் போன்று காட்சிகள் தோன்றி மறைவதும், வர்ணங்கள் மாறி மாறி வீசுவதும் பார்க்கவேண்டியவை.

மாண்டுபோன நாடகக் கலேக்கு புத்துயிரளித்து கலேத் தொண்டு செய்துவரும் ஸ்ரீ. ராஜமாணிக்கம் உண்மையில் வெற்றி அடைந்துவிட்டார். பூலோகம் நரகமாகிக் கொண்டுவரும் இந்தக் கலி உலகத்தில் நாம் காலந்தள்ளும்படி கலே உலகத்தைச் சிருஷ்டித்தவருள் ஒருவராக ராஜமாணிக்கத்தைக் கூறவேண்டும்.

---

(408-ம் பக்கம் தொடர்ச்சி)

சாங்கத்தார் செய்த பிரயத்தனத்தைக் காண்பிக்கிறதல்லவா?

பிறகு, டச்சுக்காரரின் ஆட்சியின் முடிவில், நில உடைமைக் கொள்கையில் இரண்டு பெரிய மாறுதல்களேக் காண்கிறேம். முதலாவது வருவாயில் பங்கு கொடுக்கும் வழக்கம் இல்லாமல் முடிக்கு ஊழியம் செய்வதுதான் முக்கியமெனக் கருதப்பட்டது. இரண்டாவது, உடையவனுக்கு தன் நிலத்தைத் தன் வாரிசுக்கு விடவோ அல்லது விற்கவோ பூரணமான உரிமை இருந்தது.

இன்று, ஆங்கிலேயரின் ஆட்சியின் பயனக நில உடைமைக் காரனுக்கு தன் நிலத்தைத் தான் நினைத்தபடி செய்ய பூரணமான சுதந்திரம் உண்டு. ஆனல் நில எடுப்புச் சட்டத்தின் படி (Land Acquisition Ordinance) பிரஜைகளுடைய நிலம் முடிக்குத் தேவையாயிருந்தால் முடி அதைக் கைப்பற்றிக் கொள்ளலாம்; ஆனல் அதற்குத் தகுந்த விலே கொடுக்க வேண்டும். அதற்காக பிரஜை முடியுடன் வழக்காடலாம். இதை விட, ஈடு, குத்தகை முதலிய உடைமைகளும் உண்டு.

எதற்காக இந்த கிராமத்தார் மகாநாடு கூடியிருக்கிறது? அவர்கள் வாதிக்கும் விஷயம் என்ன?

மாட்டுப் பொங்கலுக்கடுத்த கரி நாளன்று கட்டுத் துறையிலிருந்து மாட்டை காலையில் அவிழ்த்துவிடும் போது, ஊரில் வேறு யாராவது விட்டிருக்கிறார்களாவென்று பார்த்துத்தான் விடுவது வழக்கம். முதலில் அவிழ்த்து விடுவதற்கு பயம்! "பொங்கலுக்கு முதல் மாடு விட்டாற்போல" என்று ஒரு வசனம் கூட சொல்வதுண்டு கிராமாந்திரங்களில் நாமாக அக்ஷதை போட்டுக் கொண்டு ஒரு காரியத்தை முந்தி செய்ய முயற்சிப்போமானால். கிராமவாசிகளுக்குள் ஒரு நம்பிக்கை, மாட்டுப் பொங்கலன்று கட்டின மாடு, கரிநாளன்று ஊரிலேயே முதலில் அவிழ்த்து விடுபவருக்கு 'ஆகாது' என்று. அப்படிச் செய்பவர்களுக்கு ஏதாவது கெடுதல் உண்டாகும் என்று அவர்கள் அபிப்பிராயம். ஆதலால் இதற்கு ஊரார் கட்டுப்பாடாக ஒன்றுகூடி "முதல் மாட்டை" யார் விட வேண்டுமென்று தீர்மானிப்பது வழக்கம். நாட்டார்களின் ஏகோபித்த அபிப்பிராயத்தின்படி நடப்பார்கள் கிராமத்தினர்.

நம் கிராமத்தில் இரண்டு நாட்டான்கள். எந்த விஷயத்திலும் கணேச நாட்டாருக்கும் தங்கவேலு நாட்டாருக்கும் தகராறு உண்டாவது சகஜம். கரகம் எடுப்பதில் இருவருக்கும் தகராறு, தெருக்கூத்து போடுவதில் தகராறு, 'காமிட்டி நடுவதில்' (காமன் பண்டிகை) தகராறு, இதேமாதிரி இந்த வருஷம் இந்த மாட்டு விஷயத்திலும் நாட்டார்கள் இருவரும் ஒரு சமரஸமான தீர்மானத்திற்கு வரவில்லை.

* * *

மாட்டுப்பொங்கல். பெரும்பொங்கலை விட குடியானவர்களுக்கு மாட்டுப் பொங்கல்தான் ரொம்பப் பிரதானம். சாணியும், மாடுகளால் தின்னாமல் கழிக்கபட்டு மிதிக்கபட்டிருந்த வைக்கோல் கூளானும் நிறைந்து அசுத்தமாகக் கிடந்த தொழுவங்களைச் சுத்தம் செய்து கொண்டிருந்தார்கள் பெண்கள். சிறுவர்கள் அன்று மாலை சீக்கிரமாகவே மாடுகளை மேய்ச்சலிலிருந்து ஓட்டிக்கொண்டு வந்து ஏரியில் நன்றாய்க் குளிப்பாட்டினார்கள். சில பையன்கள் கொன்னைப் பூ, புன்னைப் பூ, ஆவாரம் பூ, மாவிலை, வேப்பிலை முதலியவைகளைச் சேகரித்து அவைகளால் மாடுகளுக்கு மாலைகள் தயாரித்தார்கள். காளைகளுக்குக் கொம்புகள் சீவி ஒன்றில் சிகப்பும் மற்றொன்றில் பச்சையுமாக வர்ணம் தீட்டினார்கள். பசுக்களின் முகங்களில் நிறைய மஞ்சளைப் பூசி பெரிய குங்குமப் பொட்டுகளிட்டார்கள்.

விளக்கு வைத்து இரண்டு நாழிகையிருக்கும்; ஊரெல்லாம் ஒரே அமர்க்களம். எங்கு பார்த்தாலும் தாம்பாளம் அடிக்கும் சப்தம். ஊரிலுள்ள பிசாசுகளை யெல்லாம் துரத்திவிடும் போலிருந்தது அந்த சப்தம். "கார்த்திகை மாசம் கண்ணும் தாயும் பொங்கலோ பொங்கல்!" என்று சிறுவர்களின் ஆரவாரம்.

எப்போதாவது ஒரு காக்கை அல்லது ஒரு சண்பகப் பறவை கத்தும். அல்லது ஊர் மேற்கிலுள்ள கருமான் பட்டறை சத்தம் கேட்கும். அல்லது சேடத் தெருவில் ஒன்றிரண்டு "சொடக் சொடக்" என்ற துணி நெய்யும் சத்தம். இவைகளில் ஏதாவது சிற்சில சமயங்களில் கேட்டுக்கொண்டிருக்கும் அந்த ஊரில். வேறொரு சத்தமுமிராது. அவ்வளவு அமைதியுடனிருக்கும் ஊரில், இன்றைக்கு மாத்திரம் ஒரே பேரிறைச்சல்.

இப்படி ஊரெல்லாம் ஆநந்தத்தில் மூழ்கியிருந்ததே தவிர, கவலையும் ஒரு புறத்தில் இருந்து கொண்டே யிருந்தது. அப்படிக் கவலைபட்டவர்கள் பேசிக்கொண்டது என்ன தெரியுமோ?

"ஊரார் தீர்மானப்படி தெக்குத் தெருவு அப்பாசாமி 'முதல் மாட்டை' வுடுவானா? அல்லது அவன் நாட்டானுக்குப் பயந்து மாட்டை விடாமல் சண்டி செய்வானா? அப்படிச் செய்தால் கலகம் உண்டாகுமே!" இதே பேச்சுத்தான்.

இந்த சச்சரவை ரொம்ப வெறுத்தவர்கள் சிறுவர்களும் ஸ்திரீகளும் தான். அவர்களுக்கு வருஷம் முழுவதிலும் மறு தினம் வரும் கரிநாள் ஒன்றுதான் "விடு முறை" நாள். அன்று அவர்கள் களை வெட்டவோ, அறுவடைக்கோ, போரடிக்கவோ ஒரு வேலைக்கும் போகமாட்டார்

கள். எல்லோரும் விளையாட்டிலேதான் முனைந்திருப்பார்கள். அப்பாசாமி மாட்டை விடாத போனால் அவர்கள் விளையாட்டெல்லாம் நின்றுபோய் கலக மல்லவா நடக்கும்? அவன் மாத்திரம் தான் நாட்டான் வார்த்தையைக் கேளாமல், ஊரார் சொல்கிறபடி செய்தால் எவ்வளவு நன்றாக இருக்கும்? எவ்வளவு உத்ஸாகமாகப் பெண்கள் ஒன்று சேர்ந்து அரிசிக் கூடை ஒன்றைச் சுற்றி கும்மிப் பாட்டுகள் பாடி "தத்தங்கி" அடிப்பார்கள்? எவ்வளவு சந்தோஷமாக கரிநாளுக்கு மறுநாள் 'துறைப் பொங்க'லென்று அவர்கள் தத்தங்கியில் சேகரித்த அரிசியை ஏரித்துறையில் "கூட்டாஞ்சோறு" சமைத்து சல்லாபங்கள் செய்துகொண்டு சாப்பிடுவார்கள்? எவ்வளவு கரைகடந்த ஆநந்தத்தோடு தங்கள் கவலைகளையும் வறுமைகளையும் மறந்து பெரியோர்கள் சிறுவர்களுடன் சேர்ந்துகொண்டு இலுப்பந்தோப்பில் பலிஞ்சடுகுடு, உப்புக்கோடு, பத்துக்கோடு முதலிய ஆட்டங்களை ஆடுவார்கள்? கிராமம் முழுவதுமே இந்த விதமாகக் களியாட்டங்களி லாழ்ந்திருக்குமே! இவ்விதமெல்லாம் யோசித்துக்கொண்டே அன்றிரவைப் போக்கினார்கள்.

* * *

கரிநாள் காலை 'கொக்கரகோ' வெனக் கோழிகள் கூவின. இளம் வெயிலை வாரி யிறைத்துக்கொண்டு இலுப்பந்தோப்பின் பின்புறத்தில் கிளம்பினான் உத்தராயணச் சூரியன்.

திரும்பவும் புளியமரத்தடி 'ஸெஷன்' கூடிற்று. வடக்குத் தெருவார்களும் தெற்குத் தெருவார்களும் ஒன்று சேர்ந்து அப்பாசாமிக்கு பத்துவருஷ காலமாக முறைவாராததனால் அவன்தான் அன்றைக்கு விடவேண்டும் என்று தீர்மானித்தார்கள். ஆனால் அதைத் தங்கவேலு நாட்டார்மட்டும் ஆமோதிக்கவில்லை.

"எலேய்! அப்பாசாமி, இந்த ஊரானுவ சொல்றத்தே கேட்டுகிட்டு மாட்டெ வுடாதே. நான் சும்மா இருக்கமாட்டேன். இதென்ன அக்கிரும்பா யிருக்குதே! நம்பதான் எளெச்சவங்களா? அதென்ன அவ்வளவு கிருவம் இந்த வடக்குத் தெருவாங்களுக்கு? நம்பளே வுடனும் தலையெழுத்தா? நம்ப தெருவு முட்டாப்பயலுவுலும் அவகளோடே சேந்துகிட்டு குதிக்கிராங்க. நடக்கறது நடக்கட்டும். நீ மாட்டெ வுடாதே!" என்று தன் மீசை துடிக்க கோபத்துடன் உரக்கக் கத்தினார் நாட்டார்.

"அப்படியானா, நம்பளே போய் அவன் மாட்டெ அவுத்து வுட்டுடுவோம்" என்று கிளம்பினார்கள் சில வடக்குத் தெருவார்கள். இதைக் கேட்டதும் அவர்களுடன் சேர்ந்துகொண்ட தெற்குத் தெருவார்கள் ரோஷத்தினால் பிரிந்துகொண்டார்கள்.

"எலே, வடக்குத்தியாங்களா, அவுட்டுண்டா. ஒரு கை பார்க்கறது. அவுத்து வுடுங்க பார்க்கலாம்" என்று வீரம் பேசினார்கள்.

"என்னடா பண்ணிடுவீங்க, அவுத்து வுட்டாக்கா?"

"கையை முறிச்சிடுவோம்!"

வார்த்தைகள் முற்றிவிட்டன. பகவான் கொடுத்த கால்கைகள் இருக்கும்போது முடவன்போல வாய்ச்சண்டை செய்வானேன், கைச்சண்டைதான் செய்வோமே என்று நினைத்தனரோ என்னவோ, திடீரென்று ஒருவரை யொருவர் அடிக்கத் தலைப்பட்டார்கள்.

எதிர்பாராத சம்பவம்.

"ம்பா!" என்று கத்திக்கொண்டு அந்தக் கூட்டத்தின் நடுவில் ஓடிவந்தது ஒரு மைலைக்காளை. எல்லோரும் திகைப்புண்டு நின்றார்கள்.

"அவுத்து வுட்டாண்டா எந்தப் பயலோ!"

"யார் அவுத்துவுட்டது, யார் மாடு?" என்று கேட்டார் தங்கவேலு.

"அப்பாசாமி மாடுதான் போலிருக்குது" என்றான் ஒருவன்.

"இல்லே. என் மாடு இல்லே?" என்றான் அப்பாசாமி.

"சாமி சாமி, அது பட்டணத்து ஐயிரு மாடுல்ல" என்றான் மாட்டுக்காரப்பயல்.

அவர்கள் கோபமெல்லாம் இருந்த இடம் தெரியாமற்போய்விட்டது.

இதே சமயத்தில் பட்டணத்து அய்யரும் ரங்கநாதய்யரும் அவ்வழியே வாய்க்காலுக்கு ஸ்நானம் செய்யப் போய்க்கொண்

(422-ம் பக்கம் பார்க்க)

# பொங்கலுக்கு மறுநாள்

கிருஷ்ணமூர்த்தி)

'பொங்கல் வர இன்னும் பத்துநாள் இருக்குது, எட்டு நாளிருக்குது' என்று சொல்லிப் பொங்கலும் வந்துவிட்டது.

அன்று இருபது நாழிகை இருக்கும். நிறைய வெண் பொங்கலும் சர்க்கரைப் பொங்கலுமாகச் சாப்பிட்டு விட்டு புளிய மரத்தடி நிழலில் கூடியிருந்தார்கள் கோடாலிக் கருப்பூர் குடியானவர்கள்.

அன்று காலையில் ஆடவர்கள் காலா காலத்திலெழுந்திருந்து கடை கண்ணி களுக்குச் சென்று அன்றைக்கு வேண்டிய சாமான்களை வாங்கிக்கொண்டு வந்தார்கள்; பெண்கள் வீட்டை மெழுகிச் சுத்தம் செய்து கோலம் செம்மண் இவைகளால் அலங்கரிப்பதில் ஈடுபட்டார்கள். வாழைச் சீப்புகள், இஞ்சிக் கொத்து, மஞ்சள் கொத்து, தேங்காய், அரிசி, பறங்கி, பூசனி முதலிய காய் வர்க்கங்கள்—இவை களை ஒரு கூடையில் போட்டு கருப்பங் கழி ஒன்றுடன் தத்தம் எசமான் வீட்டுக்கு உலுப்பை அனுப்பினர்கள் சிலர். பொங்கல் வைக்கும் பொழுதைப் புரோகிதரைக் கேட்டுத் தெரிந்துகொண்டு வீட்டு முற்றத்தில் புது அடுப்புகள் வைத்துப் பொங்கல் பொங்கினர்கள். ஏழு இலைகளில் பொங்கலைப் படைத்து "காய்ந்துகொண்டு போகும்" பகவா னுக்கு நிவேதனம் செய்து, "சாமி, ஆண்டவனே, பயிர் பச்சையெல்லாம் நல்லா யிருக்கணும், மழை நல்லா காலா காலத்தில் பெய்யணும்!" என்று வேண்டிக் கொண்டார்கள். வண்ணான், பரியாரி, வெட்டியான், தலையாரி, பண்ணைக்காரன் இவர்களுக்கு ஐந்து இலைகளை ஒதுக்கி விட்டு மீதிப்பிரசாதத்தை குடும்பத்தார் எடுத்துக்கொண்டார்ள்.

இவ்வளவு காரியமும் ஆன பிற்பாடு தான் ஜோராய் காற்று வாங்கிக்கொண்டு புளிய மரத்தடியில் கூடியிருந்தார்கள்.

"என்ன நாட்டாரே, இப்படி யெல் லாரும் கூடிகிட்டு ஒண்ணும் பேசி முடிக்காமெ ஒத்தரை ஒத்தர் பாத்து கிட்டு ஒக்காந்திருந்தா நாளெ மைக்காணு காரியம் நடக்கத் தேவலெ? அவுங்க அவுங்க பேசரத்தெ பேசி முடிச்சால்ல ......" என்ருர் கந்தசாமி படையாச்சி.

"சரி கந்தசாமி, போன வருசம் கரி நாள் அன்னிக்கு மாட்டெ வுட்டது ஆரு?" என்று வடக்குத் தெரு நாட்டார் கணேச படையாச்சி கேட்டார்.

"ஏன், நான்தான் வுட்டேன். அதுக் குள்ர மறந்தூட்டிங்களா?" என்று பதி லளித்தான் தெற்குத் தெரு ரங்கன்.

"வருசா வருசம்தான் நம்ப தெருமே லெயே சீட்டு வுளுதே......" என்ருர் ஒரு கனைப்பு கனைத்துவிட்டுத் தெற்குத் தெரு நாட்டார் தங்கவேலு படையாச்சி.

"ரொம்ப வேடிக்கையாயிருக்குதே! வருசாவருசம் ஒங்க தெருவிலே எங்கே வுட்டாங்க? மூணும் வருசம் நாலாம் வருசமெல்லாம் வடக்குத் தெருதான் வுட்டுது......" என்று மறுத்தார் கணேச நாட்டார்.

"எங்க பாட்டன் நாள் மொதல் நானும் தான் பாத்துகிட்டு வர்ரேன். இந்த முப் பது வருச காலத்திலெ இருபது இரு பத்து மூணு வருசமா தெற்குத் தெருவேதான் வுட்டுகிட்டு வருது......"

"ரொம்ப நெசமாயிருக்கே! இப்ப ரெண்டு வருசமாகத்தான் நீங்க வுட்ரீங்க. அதுக்கு முந்தியெல்லாம் வடக்குத் தெரு மாடுதான். என்ன அண்ணே, ஒங்களுக் குத் தெரியாதா?" என்று கேட்டார் வெற்றிலை பாக்கை உரலில் போட்டு "லொட் லொட்" என்று இடித்துக் கொண்டிருந்த கண்ணு படையாச்சியை.

"எனக்கு அவ்வளவா நெனப்பு இல்லெ" என்ருர் கண்ணு படையாச்சி.

இப்படிப் பலபேர் தங்கள் தங்கள் வாதங்களைப் பேசிக் கொண்டிருந்தார்கள்.

# மாரியப்பன் மருமகன்

(ஸ்ரீ. டி. ஆர். பந்துலு)

(1)

மாணிக்கம் சொன்ன சங்கதிகளைக் கேட்டதும் கன்னியப்பன் நினைத்திருந்த எண்ணங்களெல்லாம் அவனுக்கு ஒரு கனவுபோல் தோன்றியது. அவன் அவ்வாறு நடக்குமென்று ஒருபோதும் நினைக்கவேயில்லை. அவன் மலைபோன்ற எண்ணங்களெல்லாம் மெல்ல அடிக்கும் காற்றில் சிறு தூசிபோல் பறந்தன. அவன் கண்களில் நீர் ததும்பியது. அவன் மனம் தடுமாறிற்று. பத்து மணிவரை ஏர் உழுத களைப்பால் அவன் கண்கள் இருண்டன. அவனுக்கு எதிரில் இப்பூலோகமே சுழல்வதுபோல் தென்பட்டது. மாணிக்கம் கொண்டுவந்த கஞ்சி அவனுக்கு ஒரு விஷமாகவே தோன்றியது. அவனிடம் இருந்து இருந்து எழுந்த கோபம் அனல்கொண்டு வீசியது. பல்லை நெரித்துக்கொண்டு எழுந்தான். என்ன செய்வது என்று தோன்றவில்லை. மாணிக்கம் "யப்பா! கஞ்சி குடி. அது கிடக்குது. இந்த அற்ப பயலுங்களுக்கெல்லாம் நம்ப பயந்தூட்டா அப்புறம் என்ன இருக்குது?" என்று கன்னியப்பன் கோபத்தைச் சற்று தணியச் செய்தான். அவனும் கோபத்தை அடக்கிக்கொண்டு கஞ்சியைக் குடித்தான். கை கால்களை அலம்பிக்கொண்டுமறுபடியும் மரத்தடியில் வந்து உட்கார்ந்தான்.

"கண்ணு? கொஞ்சம் வாய்க்கு கொடுடா!" என்றான். மாணிக்கம் தன் மடியில்வைத்திருந்தஒரு ஓலைப்பெட்டியை எடுத்துக் கொடுத்தான். கன்னியப்பன் அதை வாங்கி அதிலிருந்து ஒரு பாக்கை எடுத்து பாக்கு வெட்டியில் போட்டு வெட்டி வாயில் போட்டுக்கொண்டான். இரண்டு வெற்றிலையையும் சுண்ணாம்புப் பெட்டியையும் வெளியில் எடுத்துக்கொண்டே "ஏண்டா மாணிக்கம், எங்கே வெற்றிலையே காணல்லையே. ரெண்டே ரெண்டு சரவு கிடக்குதே?" என்றான்.

"அல்லாம் மாமன் வந்தாரே அவுரு எடுத்துக்கிட்டுப் பூட்டாருப்பா."

"வெத்திலையைக் கூடவா எடுத்துகிட்டுப் பூட்டான். அவன்கணக்கா, என் கண்ணுலே அம்ட்டிருந்தா என்ன செய்வேன் தெரியுமா? நானு என்னமோ அவனை அப்பனில்லாத குழந்தையாச் சேண்ணு வளத்துப் பெண்ணையும் கொடுத்து கண்ணாலம் செஞ்சுவைச்சா? கழுதை பொண்டாட்டியை உட்டுட்டு பினுங்குக்கு ஓடிப்பூட்டானே! மறுபடியும் இங்கே ஏன் வந்து அவளை அழைச்சிகிண்ணுபோரான்னு கேக்கிரன்? அவனை இத்தோடே சும்மா உட்டேணு பாரு. அவங்க எசமாங்கிட்டயே இந்த நாயத்தைச் சொல்லி என்ன பாடுபடுத்தி வைக்கிறேன் பாத்துகோ."

"யப்பா எதோ கிடக்கிறது. இதுவரையும் நம்ப அக்காளையும் மரகதத்தையும் காப்பாத்தினது தருமமெண்ணு நினைச்சுகிண்டா போச்சு" என்று சொல்லிவிட்டு மாணிக்கம் கஞ்சி கொண்டு வந்த கலயத்தை எடுத்துக்கொண்டு புறப்பட்டான். "ஏண்டா கண்ணு, ஊட்டுக்கு போறயா? அங்கே எசமாவூட்டு ஆளு முருவன் இருந்தாண்ணா மாமரத்துக் கயணி உழவு ஆயிடுச்சிண்ணு சொல்லி சம்பா வெரை ஊரப்போட்டு இருக்குது, அதை எடுத்துகிணு இங்கே நான் வரச் சொன்னேன்னு சொல்லு" என்று சொல்லிவிட்டு மாமரத்து நிழலிலேயே தலைக்கு ஒரு கல்லை எடுத்து வைத்துக் கொண்டு படுத்தான். அவன் எண்ணங்களெல்லாம் அவன் மருமகன் மாரியப்பன் மேலேயே சென்றன. அவனை என்ன செய்வது என்று பலவாறு யோசித்துக் கொண்டிருந்தான். தென்றலின் மெல்லிய ஓட்டத்தாலும், களைப்பாலும் அவனை அறியாமலே அவன் கண்கள் மூடிக் கொண்டன.

(2)

குமார்பாடி என்பது ஒரு சிறு அழகிய கிராமம். அவ்வூரின் கிழக்குப் புறத்தில் ஓடுவது ஒரு சிறு ஆறு. அவ்வூரைச் சுற்றிலும் பெரிய தென்னந் தோப்புக்களும் மாந்தோப்புக்களும் நிறைந்திருந்தன. ஆற்றின் பக்கத்தில் அழகிய வயல்கள் தலைகுனிந்து காற்றில் 'ஹோ,' என்று சப்தம் செய்துகொண்டிருக்கும். ஆற்றிலிருந்து வரும் கால்வாய்களில் நீர் முத்துப் போல் தெளிந்து எப்பொழுதும் ஓடிக்கொண்டிருக்கும். அவ்வூர் பண்ணையாட்கள் காலாகாலத்தில் செய்யவேண்டிய சாகுபடிகளைச் செய்து சுகமாய் வாழ்ந்து வந்தார்கள். அப்படிப் பண்ணை வேலை செய்பவர்களில் கன்னியப்பனும் ஒருவன். அவனுக்கு இப்பொழுது சுமார் அறுபது வயது இருக்கலாம். அவன் காலம் முழுவதும் பெரிய பண்ணை சுப்பராயய்யர் வீட்டிலேயே வேலை செய்து பிழைத்தவன். இப்பொழுதுதான் அவன் எசமானன் ஒரு அரைக்காணி நிலம் சொந்தமாகக் கொடுத்தார். அவ்வூர் பள்ளிப் படையாச்சிகளுக்கு எல்லாம் அவன் தான் நாட்டாண்மைக்காரன். அவர்களில் எவ்விதமான சச்சரவுகள் ஏற்பட்டாலும் கன்னியப்பனிடமே அது தீர்ப்புக்கு வரும். அவனும் அதை நியாயப்படி தீர்மானம் செய்துவிடுவான். (அதனால் அவன் சட்டப் புத்தகங்களை நிறையப் படித்திருப்பான் என்று நினைக்காதீர்கள்.)

கன்னியப்பனுக்கு ஒரு தங்கை. அவள் புருஷன் இளம் வயதிலேயே இறந்துவிட்டான். அவளுக்கு மாரியப்பன் என்று ஒரு மகன். அவனைச் சிறு வயதிலிருந்தே கன்னியப்பன் அருமையாக வளர்த்துத் தன் பெண்ணை அவனுக்கு கலியாணம் செய்து வைத்தான். கலியாணம் நடந்த ஒரு வருஷத்திற்கெல்லாம் அவனுக்கு ஒரு பெண்குழந்தை பிறந்தது. குழந்தை பிறந்த சிலநாட்களில் மாரியப்பன் பெண்டாட்டியையும் குழந்தையையும் விட்டுவிட்டுப் பினாங்குக்கு ஓடிவிட்டான். கன்னியப்பனே தன் தங்கை, பெண், அவள் குழந்தை எல்லோரையும் போஷித்துவந்தான். அவன் தங்கையும் இரண்டு வருஷங்களில் இறந்துவிட்டாள். பிறகு அவன் தன்னுடைய பெண்ணின் மகள் மரகதத்தை மாணிக்கத்திற்கு கலியாணம் செய்துவைத்து விடுவது என்று நினைத்தான். அதற்கு அவன் மகளும் சம்மதித்தாள். இப்படி அவன் நினைத்திருந்த எண்ணங்களெல்லாம் அன்று அவன் மருமகன் மாரியப்பன் வந்ததிலிருந்து வீணாயின. அவன் தன் பெண்டாட்டியையும் மரகதத்தையும் அழைத்துக்கொண்டு போய்விட்டதாகவும் மரகதத்தை பக்கத்து ஊரில் கொடுத்துக் கலியாணம் செய்யப்போகிறான் என்ற சங்கதியையும் மாணிக்கம் சொன்னபோது அவனுக்கு ஒரு கனவாகத் தோன்றியது. அவன் மாரியப்பன் மறுபடியும் பினாங்கிலிருந்து திரும்பி வருவானென்று ஒருபோதும் நினைக்கவில்லை. அவன் நினைத்ததற்கு மாறாக நடந்ததைப் பற்றிச் சிறிது கவலைப்பட்டான். அவனுக்கு மறுபடியும் எப்படியாவது மரகதத்தைத் தன் பிள்ளை மாணிக்கத்திற்குக் கலியாணம் செய்து வைக்க வேண்டும் என்ற எண்ணம் மேல் மேலும் தூண்டியது.

(3)

அன்று சித்திரா பௌர்ணமி. நீல வானில், நிலவு நிர்மலமாய்ப் பிரகாசித்தது. சம்பாப் பயிர்களின் கதிர்கள் சந்திரிகையின் ஒளியில் பட்டு பொன்போல் ஜ்வலித்தன. வயல்களின் நடுவில் காவலுக்காக வந்த மாணிக்கத்தின் மனது எதோ ஒரு வித உல்லாசத்தையே அடைந்தது. அப்போது அவன்மேல் தென்றல் மெல்லத் தடவிக்கொண்டு சென்றது. அவன் அங்கே போடப்பட்டிருந்த கயிற்றுக் கட்டிலில் உட்கார்ந்துகொண்டான். தூக்கம் வரவில்லை. அவனுக்கு அப்போது உண்டான எண்ணங்கள் சிறந்து விளங்கிய நிலவு ஒளியையும், பரந்து கிடந்த வயல் வெளியையும் கடந்து சென்றன. அவன் ஒரு கல்வியிற் சிறந்த கம்பனாகவோ அல்லது கவிகளில் சிறந்த காளிதாசனாகவோ இருந்திருந்தால் அக்காட்சியை எவ்வாறு வருணித்திருப்பான் என்பது தெரியும். ஆனால் அவன் ஒரு சாதாரண உழவன் மகனானதால் அதை வருணிக்க முடியவில்லை. இருந்தாலும் அவன் அவ்வியற்கையழகில் ஈடுபட்டு ஆனந்தம்

அடைவது தன் கையிலிருந்த புல்லங்குழலைக்கொண்டு சன்னமாக ஊதத் தொடங்கியதால் தெரிந்தது. அவன் ஊதினதும் இனிய கீதம் காற்றில் மிதந்து சென்றது.

அப்போது அவன் எதிரில் ஒரு உருவம் மெல்ல நடந்து வருவதைக் கண்டான். அவன் மனம் சிறிது பயந்தது. மெள்ள மெள்ள அவ்வுருவம் அவன் அருகில் வந்து நின்றது. மாணிக்கத்திற்கு அப்போது மனத்தில் பலபல எண்ணங்கள் தோன்றின. இருவரும் சற்றுநேரம் பேசவில்லை. ஆனால் அவர்கள் கண்களிலிருந்து தோன்றிய காதல் கனிந்த பார்வைகள் ஒன்றையொன்று தழுவியது. பிறகு மாணிக்கம், "என்ன மரகதம், எங்கே இராக்காலத்திலே இங்கே வந்தே?" என்றான். மரகதம் வெட்கத்துடன் தலைகுனிந்தாள்.

மாணிக்கம் மறுபடியும், "என்ன உனக்கு உங்க அப்பன் கண்ணாலம் பண்ண பார்த்துகிட்டிருந்தாரே, அது ஆயிடுச்சா?" என்றான்.

அப்போது மரகதத்தின் கண்களிலிருந்து முத்துக்கள் கீழே உதிர்வது போல் கண்ணீர்த் துளிகள் உதிர்ந்தன. மெல்லிய குரலில் "உங்களுக்குத் தெரியாமே எனக்கு எப்படி கண்ணாலம் ஆயிடும்"? என்றாள்.

"எனக்குத் தெரியா விட்டா உனக்கு ஏன் கண்ணாலம் ஆவக்கூடாது?"

"உங்களுக்குத் தெரியாமெ யாரு என்னைத் தொட்டு தாலி கட்டுவாங்க நீங்க அல்லவா......என்று சொல்லித் தலை குனிந்தாள். அப்போது மாணிக்கத்தின் உள்ளத்திலிருந்து எழுந்த காதல் அவனை அறியாமலேயே அவன் கைகள் மரகதத்தின் கைகளைப் பிடிக்கச் செய்தது.

மாணிக்கத்திற்குத் துணையாகப் படுத்துக்கொள்ளவந்த கன்னியப்பனும், மகளைக் காணாமல் தேடிவந்த மாரியப்பனும் வெவ்வேறு வழியாக அங்கு வந்து சேர்ந்தனர். மாரியப்பன் கண்களிலிருந்து எழுந்தகோபம் காதலரிருவர் கண்களிலிருந்தும் எழுந்த அன்புப் பார்வையால் தணிந்தது.

---

(419-ம் பக்கத் தொடர்ச்சி)

டிருந்தனர். பட்டணத்தாரைப் பார்த்ததும் அவர்கள் கொல்லென்று சிரித்தார்கள்.

"என்ன ஸார், மிஸ்டர் ரங்கநாதய்யர், ஏன் இவா இத்தனை நேரம் இறைச்சல் போட்டிண்டிருந்தா? இப்போ ஏன் சிரிக்கிறா?"

"ஒஹோ, நீங்க மதராஸின்னு, இந்த ஊருக்கு வந்து நாலு மாசந்தான் ஆறதில்லே? அப்போ நான் சொல்றேன். மாட்டுப் பொங்கல் பண்றமா? பண்றோம். அது ஆனப்பறம் மாட்டெ கொட்டாயிலே கட்டிடறோம். அதெ மறுநாள் காலம்பர ஒத்தரும் அவுத்து விடறத்துக்கு முன்னே நம்ப விட்டாக்க அது 'ஆகாது'ன்னு சொல்லுவா. அதுக்கு, இவா ஒவ்வொரு வருஷமும் ஒவ்வொருவருக்கும் முறை வரும். இந்த வருஷம்அது யாருக்கு முறைன்னு பேசறத்துக்கு கூடியிருந்தா. இதுலாம் உங்களுக்குத் தெரியாமெ மாட்டெ ஊருக்கு முந்தி அவுத்து விட்டதைப் பார்த்து சிரிக்கிறா. புரிஞ்சுதா?" என்று விபரமாக பதில் சொன்னார் ரங்கநாதய்யர்.

"பூ, இதுதானா பிரமாதம். இதென்ன ஸூபர்ஸ்டிஷன்? இதுக்காகவா ஒரு 'கான்பிரன்ஸ்' வாங்கோ போவோம் வாய்க்காலுக்கு" என்று சொல்லிவிட்டு ரங்கநாதய்யரையும் கூட்டிக்கொண்டு வாய்க்காலைப் பார்க்கச் சென்றார்.

* * *

"பலிஞ்சடு குடுகுடு" என்று அங்கேயே ஆரம்பித்தனர் சண்டை செய்ய ஆரம்பித்த இரு கக்ஷியினரும்.

"வயத்தெ நெறைய பொங்கல் இருக்கு நன்னனுன நானே நன்ன" என்று பாடிக் கொண்டு கும்பியடிக்கக் கிளம்பிவிட்டார்கள் ஊர்ப் பெண்கள்.

"பத்து பத்தாம் கோட்டில் எத்தனை பேர்?"

"பதினாறு பேர்!"

"அவனை யடி, இவனை யடி, தொரச் சாமியை அடி"—என்று பத்துக்கோடு விளையாடக் கிளம்பிவிட்டனர் சிறுவர்கள்.

---

# சாமா சாஸ்திரிகள்—ஏகாதசி விரதம்

டாக்டர் T. S. ரமணி

சாமா சாஸ்திரி நல்ல மனுஷ்யர். எங்கள் ஊரிலே அவர் தான் பெரியவர். அறுபத்தியேழு வயது. பழுத்த பழம். வைதீக விருத்தியும் உண்டு. அருணோதயத்தில் காவேரியில் ஸ்னானம் செய்துவிட்டு இடுப்பில் நார்மடியும் தலையில் ஈர வேஷ்டியுமாக வாசலோடு போனார். ஒரு கையில் சொப்புச் சொம்பில் பஞ்சபாத்திரம் உத்தரணியுடன் காவேரி ஜலம். உடம்பெல்லாம் பட்டை பட்டையாக விபூதி. முழங்காலைக் கட்டிக்கொண்டு போர்வையையும் போற்றிக் கொண்டிருந்த சுந்தரம் திண்ணையிலிருந்தபடியே 'சாஸ்திரிகளைப் பாரேன்!' என்றான். நான் ஊருக்கு வந்தது அவருக்குத் தெரியாது.

சாமா சாஸ்திரி சற்று திரும்பி நிதானித்து "அப்படியா, எப்போ வந்தாற் போலே? எல்லாரும் சௌக்கியம் தானே?" என்றார். "பெரியவாள் அனுக்கிரகத்தால் எல்லோரும் சௌக்கியம். உட்காருங்கோளேன்" என்றேன் சற்று எழுந்து நின்று.

ஒரு உத்தரணி தீர்த்தத்தை திண்ணையில் விட்டு விட்டு தன் சொப்புச் சொம்பையும் பஞ்சபாத்திரத்தையும் திண்ணையில் வைத்தார் சாமா சாஸ்திரிகள். வேஷ்டியை உதறி ஒட்டு வாரியில் கட்ட ஆரம்பித்தார்.

"என் தாத்தா, உங்களுக்குக் குளுராதோ?" என்று ஆரம்பித்தான் சுந்தரம்.

"ஓடுகிற காவேரி ஜலத்தில் சூரியோதயத்திற்கு முன்னால் ஸ்னானம் பண்ணினால் நம்மைப் பிடித்திருக்கிற குளிரும் ஓடிப் போய்விடும். புண்ணியத்திற்கு புண்ணியம். சுகத்திற்கு சுகம். இன்னிக்கு வைகுண்ட ஏகாதசி. ரொம்ப விசேஷம். உபவாஸமிருந்தால் சொல்ல வேண்டியதில்லை" என்றார் சாமா சாஸ்திரி.

"காப்பி மாத்திரம் சாப்பிட்டால் பாதகமில்லையே?" என்றான் சுந்தரம்.

"இன்றைக்கு சுத்த உபவாஸம். வேண்டுமானால் துளஸீ தளத்தைப் போட்டு தீர்த்தம் சாப்பிடலாம். நாளைக்குக் காலையில் இரண்டு நாழிக்குள் பாரணை செய்யவேண்டும். இந்த நாளில் தான் டாக்டர்கள் கூட உபவாஸம் தேவலை என்கிறார்களே. பக்கத்திலிருக்கும் டாக்டரைத் தான் கேளேன்" என்றார்.

"அது என்ன விஷயம், சாஸ்திரிகள்?" என்றேன்.

"கோடியாத்து சுப்பிரமணிய அய்யருக்கு நீர்ரோகமாம். பெரிய டாக்டர் வந்து பார்த்தார். அவர் நீரையும் என்னமோ சோதனை செய்தார். கடைசியிலே 'நீங்கள் வாரம் ஒரு முறையாவது சுத்தப் பட்டினியாக யிருக்க வேண்டும். வேண்டுமானால் இரண்டு ஆரஞ்சுப் பழம் சாறு பிழிந்து சாப்பிடலாம். மருந்தும் அனுப்புகிறேன், சாப்பிடுங்கள்' என்று சொல்லிவிட்டு ரூ 20 பீஸையும் வாங்கிக் கொண்டு காரிலேயே போய்விட்டார். சுப்பிரமணிய அய்யர் பண்ணுகிற சிரார்த்தம் அன்றைய தினம். நானும் அங்கிருந்தேன். வெங்கடாசலபதியை வேண்டிக்கொண்டு சனிக்கிழமை விரதமிருந்து வருகிறார் சுப்பிரமணிய அய்யர். டாக்டரும் இப்போது நீர் ரோகமும் கொஞ்சம் மட்டு என்று நேத்திக்கு வந்தபோது சொன்னார்" என்றார் சாஸ்திரியார்.

"சரிதான்; தங்கள் வைதீகத்தை டாக்டரைப் பார்த்தவுடன் வைத்தியத்திலும் சேர்த்துவிட்டாப் போலேயிருக்கு. என் ஏகாதசி விரதத்துக்கும் ஏதாவது வைத்திய சம்பந்தம் உண்டோ? சொல்லுகிற தானே?" என்றான் சுந்தரம்.

"எண்டா சுந்தரம், நம் சாஸ்திரங்களெல்லாம் நம்முடைய சுகத்திற்குத் தான் என்று அடிக்கடி நான் சொல்லவில்லையா? ஏகாதசி விரதம் ரொம்பப் புண்ணியம். உடம்புக்கும் ஆரோக்கியம் கொடுக்கும்.

"ஏகாதசிக்கு முதல் நாள் ஒரு வேளை மாத்திரம் மத்தியானம் சாப்பிடவேண்டும். ஏகாதசி அன்றையதினம் சுத்த உபவாஸம். மறுநாள் காலையில் இரண்டு நாழிகைக்குள் பாரணை. அன்றை தினமும் ஒரு வேளை சாப்பாடு தான். பாரணைக்கு, நெல்லிக்காய் விடாம் பச்சடி, புளி சேர்க்காத பொரித்த குழம்பு, அகத்திக்கீரைக் கறி, எலுமிச்சம்பழ ரஸம், இதெல்லாம் சேர்த்துக்கொண்டால் இன்னும் நல்லது. உடம்புக்கும் சுகம்."

சாமா சாஸ்திரிகள் இயற்கை வைத்திய முறையில் சொன்ன சாப்பாட்டின் திட்டம் என் மனதைக் கவர்ந்தது. வெட்டை சம்பந்தமான நீர் கோளாறுகளுக்கு அகத்திக் கீரை நல்லது. புளியைவிட எலுமிச்சம் பழம் சேர்த்துக்கொள்வது உடம்புக்குச் சௌகரியம். நெல்லிக்காய் (ஆமலகம்) ஜீர்ண சக்தியை உண்டுபண்ணும் என்று தமிழ் வைத்திய நூலில் படித்திருக்கிறேன். நீரைப் பிரிக்கக் கூடிய மருந்துகள் ஒருதரம் பேதிக்கு சாப்பிட்ட பிறகாவது, அல்லது ஒரு வேளை பட்டினி போட்ட பிறகாவது நன்றாக வேலை செய்யும் என்பதை மேல்நாட்டு வைத்திய சாஸ்திரம் ஒப்புக்கொள்கிறது. இவை எல்லாம் ஒன்று சேர்த்துச் சொன்ன சாப்பாட்டுச் திட்டத்தை ஆகாரத்தைப்பற்றி ஆராய்ச்சி செய்யும் நிபுணர்கள்கூட ஒப்புக் கொள்வார்கள்.

சாமா சாஸ்திரியாரைப் பார்த்து இதெல்லாம் எந்த புஸ்தகத்திலிருக்கும் என்றேன்.

"இதெல்லாம் அனுபவ விஷயம். வீட்டிலிருக்கும் பெரியவர்களைக் கேட்டால் தெரியும். ஆனால் இந்த நாளில் இதெல்லாம் யார் கேட்கிறார்கள்? ஆறு நாள் வேலை செய்துவிட்டு ஏழாவது நாள் லீவு கேட்கிறார்கள். தினம் எட்டுமணி வேலை செய்ய முடியாது. 6 மணிக்குக் குறைக்கவேண்டும் என்கிறார்கள். இந்த நாளில் இரண்டு வேளை சாப்பாட்டுக்கு எட்டு வேளை சாப்பாடும் காப்பியையும் திணித்து பதினைந்து நாளைக்கு ஒரு முறை உபவாஸமிருப்பது கஷ்டம் என்கிறார்கள். அந்த நாராயண மூர்த்திதான் உங்களுக்கு புத்தியையும் ஆயுளையும் கொடுக்க வேண்டும்" என்றார் சாமா சாஸ்திரி கையைக் கிழக்கே சூரிய பகவானிடம் நீட்டிக்கொண்டு. வேஷ்டியையும் ஒட்டு வாரியில் வெய்யிலில் கட்டி முடிந்தது. திண்ணையில் ஜபம் பண்ண உட்கார்ந்தார் சாமா சாஸ்திரி; நாங்கள் காப்பி சாப்பிட எழுந்து உள்ளே சேன்றோம். உபவாஸத்தைப்பற்றி சாமா சாஸ்திரி சொன்னதைத்தான் மறக்க முடியவில்லை.

---

# ஜெர்மன் விஸ்தரிப்பு யோசனை

ஜெர்மனி விஸ்தார மாகும் வழியில் கீழ்க்கண்ட வேலைத்திட்ட மொன்றை ஜெர்மன் பிரசார இலாகா ஆயிரக்கணக் காகச் சித்திரங்களுடன் அச்சடித்து பகிரங்கப் படுத்திற்றும்!

1. 1938 ஆரம்பத்தில் ஆஸ்திரியா சேர்க்கை.

2. 1938 முடிவில் ஜெக்கோஸ்லோ வேகியாவில் ஒரு பாகம் சேர்க்கை.

3. 1939 ஆரம்பத்தில் நாஜி ஆதரவின்கீழ் ஹங்கேரி வருவது.

4. 1938 முடிவில் போலந்து ஹிட்லரின் கீழ் வருவது.

5. 1940 ஆரம்பத்தில் யுகோஸ்லேவியா ஜெர்மனிக்கு கப்பம் கட்டும் காலமாகிறது.

6. 1940 முடிவில் ருமேனியாவும் பல்கேரியாவும் ஜெர்மனியுடன் சேருகின்றன.

7. 1941 ஆரம்பத்தில் பிரான்ஸின் வடக்கு பாகம், ஸ்விட்ஸர்லாந்து, பெல்ஜியம், ஹாலந்து, டென்மார்க் இதெல்லாம் ஜெர்மன் சாம்ராஜ்யத்தின்கீழ் வருகின்றன.

8. 1941 முடிவில் உக்ரெயினும் தென் ரஷியாவும் ஜெர்மன் பிரதேசமாகின்றன.

இந்த ஆக்கிரமிப்பு ஜாப்தாவிற்குமேல் அந்த வரிசையில் கடைசிப்படத்தில் "ஜெர்மன் சாம்ராஜ்யம் 1938-48" என்று தலைப்பிட்டு இதாலி, கிரீஸ், தென் பிரான்ஸ், தென் ஸ்பெயின்போக பாக்கி எல்லாம் ஜெர்மன் எல்லைக்குள் காட்டப்பட்டிருக்கிறது. பாக்கி இதாலிக்கோ?

---

# மன மாற்றம்

(" வஸந்தன் ")

கல்யாணம் ஆகி ஒரு வருஷமாகப் போகிறது. இரண்டுநாள் போனால் சங்கராந்தி. வாசலில் கரும்பு விற்றுக்கொண்டு போகிறான் ஒரு கிழவன். 'மஞ்சளோ மஞ்சள் !' என்று ஒரு பெண் குரல் உத்சாகமாய் தெருவிலிருந்து கிளம்பி தூரத்தில் மங்கி மறைகிறது.

இவற்றையெல்லாம் கேட்டவாறு வித்யாதரன் சாலை வழியே நடந்து சென்றான். 'பொங்கலோ பொங்கல்!' என்ற குரல் அவன் ஹிருதயத்தைத் தூண்டிவிட்டு ஒருவித குதூகலத்தைக் கொடுப்பதை அவன் உணர்ந்தான். 'பொங்கல்' என்ற குரலில் பொதிந்திருந்த பல கருத்துக்கள் கனவுபோல் அவனுக்குத் தோன்றின.

நான்கு வருஷங்களுக்கு முன்னால் தன் கிராமத்தில் பொங்கலைக் கழித்தது அவனுக்கு நன்றாக ஞாபகமிருந்தது. மஞ்சள் கொத்தும் மாவிலையும் வாசலில் கட்டி இருந்ததும், குழந்தைகள் கொம்மாளம் அடித்துக் கொண்டிருந்ததும், அற்புதமாய் செய்யப்பட்டிருந்த அந்தச் சக்கரைப் பொங்கலும், மாடுகளைத் துரத்திப் பிடிக்கும் வேடிக்கையும், உலகம் சில நாழிகள் கவலையை மறந்து இன்பத்தி லாழ்ந்திருந்தும் அவன் ஞாபகத்திற்கு வந்தன.

ஹூம் ! நாலு வருஷங்களாக இந்த சங்கராந்தியை நாம் கொண்டாடவில்லை. மிருதுபாஷிணியுடன் கிராமத்துக்குப் போய் ஆத்தில் எல்லோருடனும் சங்கராந்தியைக் கொண்டாடினால் அவர்கள் எவ்வளவு சந்தோஷப் படுவார்கள் ? சித்தப்பா வேறே அங்கே வரவில்லை என்று கோபமாக இருக்கிறார். ஆனால் மிருதுபாஷிணிக்கு இதெல்லாம் பிடிக்காது. பட்டணத்தை விட்டு வெளியே போவதென்றால் அவளுக்கு வேப்பங்காய்......

இப்படி எண்ணமிட்டுக்கொண்டே வீட்டுக்கு வந்தான். அவன் வீட்டிற்குள் வந்ததை மிருதுபாஷிணி கவனிக்கவில்லை. அப்போது சில நண்பர்களுடன் அவள் பேசிக்கொண் டிருந்தாள். ஒரே கலகலப்பும் சிரிப்புமாக இருந்தது. வித்யாதரன் உள்ளே வந்ததை அவள் கவனிக்கவில்லை.

வித்யாதரன் அறைக்குப்போய் கட்டிலில் படுத்துக் கொண்டான். அவனுக்கு அப்போது மன அமைதியில்லை. கீழ் ஹாலில் 'கொல்' என்று எல்லோரும் சிரித்துக்கொண்டிருந்தது அவனைச் சித்திரவதை செய்தது.

சென்ற சில மாதங்களாக அவன் மனதில் உருத்திக்கொண்டிருந்த ஒரு நினைவு கிராமத்தின் ஞாபகம் வந்ததும் ஒரு புயலைக் கிளப்பிவிட்டது. மிருதுபாஷிணிக்கும் தனக்கும் இருந்த சம்பந்தத்தில் ஒரு விதமான மனக் குறையும் அவனுக்கு இல்லாதிருந்தபோதிலும் அவள் நண்பர்களைப்பற்றி வித்யாதரன் மகா கேவலமான அபிப்பிராயம் கொண்டிருந்தான். எப்பொழுது பார்த்தாலும் தன் மனைவி அவர்களிடம் பேசிக்கொண்டிருப்பது அவனுக்குப் பிடிக்கவில்லை. அந்த சிநேகிதர்களிடம் என்ன குறையிருக்கிறது, எதற்காக தான் வெறுக்கவேண்டும் என்று ஆராய்ந்தது உண்டு. அவர்களெல்லாம் படித்தவர்கள் ; தன்னிடம் மிகவும் வணக்கமாகவும் மரியாதையாகவும் இருக்கிறார்கள். பிறகு ஏன் அவர்களிடம் தனக்கு வெறுப்பு ஏற்படவேண்டும் ? என்னமோ, அவர்களுடன் மிருதுபாஷிணி பேசுவது அவனுக்குப் பிடிக்கவில்லை. இந்த சிநேகிதர்கள் தொந்தரவு இல்லாமல் மிருதுபாஷிணியுடன் தனியாக காலம் கழிக்க வேண்டுமென்பது அவன் ஆசை. அந்த ஆசை பூர்த்தியாக வேண்டுமானால் அவன் கிராமத்திற்குத்தான் போகவேண்டும். இதோ பொங்கல் வருகிறது. இந்தச் சாக்கை வைத்துக்கொண்டு இருவரும் ஊருக்குப் போய்விட்டாலென்ன ?

* * * *

" மிருதுபாஷிணி ! நான் நாளை கிராமத்துக்குப் போய் பொங்கல் கழித்ததும் வந்துவிடலாமென்று நினைக்கிறேன். நான்

போய்விட்டு வரட்டுமா?" என்று சாப்பாடானதும் கேட்டான்.

"ஏது? உங்களுக்கு கிராமத்தைக் கண்டால்தான் பிடிக்காதே!"

"இல்லே! பொங்கலுக்குப் போய்விட்டு வரலாமென்று தோன்றுகிறது. நான் போய்விட்டு வந்தூடட்டுமா?"

"நானும் வருகிறேன்" என்று சொல்லுவாளென்று அவன் எண்ணம்.

"என்ன பதில் சொல்லாமல் இருக்கேள்?"

"அதனால் பரவாயில்லே. ஊருக்குப் போய் சித்தப்பா எல்லாரையும் பார்த்துவிட்டு...பொங்கலுக்கும்..."

"ஐய! பொங்கல்! என்ன சுத்தக் கர்நாடகம்!"

"உம்...? கர்நாடகந்தான். ஆனால் பொங்கலுக்கு ஊருக்குப்போய் ரொம்ப நாளாச்சு."

"அந்தப் பட்டிக்காட்டிலே என்ன இருக்கு? டென்னிஸ் ஸினிமா இதெல்லாம்."

"அதெல்லாம் கிடையாது."

"பின்னே எப்படி நீங்க போய் இருக்க முடியும்?."

"உம்..."

"என்ன உம்? அங்கே ஹோட்டல் இருக்காது. அப்புறம்...?"

"என்ன ஹோட்டல். ஹோட்டல் பக்ஷணம் உடம்புக்குக் கெடுத வில்லேயா, மிருதுபாஷிணி?"

"அப்பாடியோய்! இதென்ன இன்னிக்கி? உங்களுக்கு ஹோட்டல்னு உசர். என்னேயும் ஹோட்டல் பக்ஷணம் திங்கச் சொல்லுவீள். திடும்முனு இப்படி கிராமத்திலே ஆசை?"

"இந்தா பாஷிணி! அதெல்லாம் இருக்கட்டும். உனக்கு கிராமம்னு..."

"ஆமாம். அங்கே சிநேகிதாள் இருக்க மாட்டாளே..."

"நல்ல சிநேகிதாள். பிராண சிநேகிதாள்! கடைசியில் பிராண சங்கடம் தான்."

"என்ன இழவு இது? இன்னிக்கு ஒரு புது தினுசாக... ஆமாம். நம்ப ஊருக்குப் போனால் சித்தப்பா ரொம்ப சந்தோஷப்படுவார்..."

"என்ன? 'நம்ப'ன்னு சொன்னே? ஏது. நீயும் வரையா?"

"ரொம்ப அழகா இருக்கே. என்னே விட்டுட்டா போக இருந்தீள்? பேஷ்!"

"அச்சா! அப்படி வா வழிக்கு. ஆனால் கிராமத்திலே ரொம்ப சங்கடமாயிருக்குமே உனக்கு?"

"ஹும்! என்ன சங்கடம் அப்படி?"

"ஏது உனக்குக் கிராமம்னு பிடிக்காது அங்கே நீ கூட வரேன்னு சொல்றே. கிராமம்னு பரவாஇல்லேன்னுகூட சொல்றியே?"

"நீங்க முதலிலே கிராமத்தெப்பத்திச் சொன்னதை நானும் இப்போ சொல்றேன்?"

"இந்தா, பாஷிணி, என்னேக் கேலி பண்ணுதே. உனக்கு கிராமத்துக்கு வர கஷ்டமா யிருக்குமே, இல்லேயா?"

"எனக்கு என்ன கஷ்டம்?"

"ஏண்டி, இத்தனே நாளா நாகரீக வாழ்க்கை அனுபவித்து..."

"ஆமாம் அந்த வாழ்க்கை யாருக்காக அனுபவிச்சேன்?..." என்று கூறி தலே குனிந்தாள்.

"என்ன? எனக்காகவா அப்படியிருந்தே? என்ன? பொம்மனுட்டிகளே நம்பவே கூடாது. நிஜமாய்த்தான் உனக்கு பட்டண வாழ்க்கை பிடித்திருந்ததென்று நினேச்சேன்!"

"ஆண்பிள்ளேகளேத்தான் நம்பப் படாது. நிஜமாய்த்தான் இந்த பட்டிணப் பயித்தியம் உங்களுக்குப் பிடித்திருக்கிற தென்று நான் நினேச்சேன்."

---

7-வது வாரம்

ஆரம்பமாகிவிட்டது

தினசரி நாடகம்

சென்னை

ராயல் தியேட்டரில்

13-1-39 வெள்ளி முதல்



# ஸ்ரீ கிருஷ்ண லீலா

செவ்வாய், வியாழன், சனி இரவு 9-30-க்கும்

மற்ற நாட்களில் மாலை 5-30-க்கும்,

நடைபெறுகிறது.

ஒவ்வொரு குடும்பத்தினரும் தவருமல் கண்டுகளிக்க வேண்டிய நாடகம்

மதுரை தேவி பால வினோத சங்கீத சபா

நவாப் T. S. ராஜமாணிக்கம்

புரோப்ரைட்டர்




## ஜனநாயகத்தின் கடமை

கடல்களுக்கப்பாலிருந்து பெரும் புயலின் சூசகங்கள் தென்படுகின்றன.

உலகத்திற்கே தீ வைக்கக்கூடியதான ஒரு பெரும் யுத்தம் வர இருந்தது. அதை நிறுத்தியாகிவிட்டது. ஆனால் சமாதானம் என்பது மட்டும் ஏற்படவில்லையென்பது நாளுக்கு நாள் தெளிவாகிறது. நடைபெறாத யுத்தங்கள் நம்மைச் சுற்றிலும் குமுறிக் கொண்டிருக்கின்றன. சுற்றி யுத்த சன்னாகங்களும் மகா பயங்கரமாகவும் தீவிரமாகவும் நடக்கின்றன. எங்கும் ஆக்கிரமப் பிரயத்தினங்கள், எதிர்ப்புகள்! அமெரிக்கர்களுக்கு உயிர் போன்ற மூன்று முக்கியமான விஷயங்கள்—மதம், ஜனநாயகம், ஸர்வதேச பரஸ்பர நம்பிக்கை—இவற்றிற்கு விரோதிகளாக சில அக்கரை சக்திகள் மீசை முறுக்குகின்றன. நவீன நாகரிகத்தில் இம்மூன்று அம்சங்களும் ஒன்றுக்கொன்று இணைப்பு கொண்டன. எங்கே மத சுதந்திரத்திற்கு ஆபத்தோ அங்கே ஜனநாயகத்திற்கு விரோதிகளான சக்திகள் வேலை செய்கின்றன என்று அறியலாம். எங்கு ஜனநாயகம் அழிகிறதோ அங்கே மத சுதந்திரம் போச்சு; இவையிரண்டும் இல்லாத இடத்தில் பரஸ்பர நம்பிக்கை ஏது? நன்னெறி ஏது? இவையற்ற சர்வதேச நிலைமையில் கட்டற்ற பேராசையும் பலாத்காரமும் தான் தாண்டவமாடும்.

இந்த மூன்று மூலதர்மங்களையும் புறக்கணிக்கும் ஒரு ஆட்சி முறையில் சாந்தமென்ற மன்னனுக்கு இடமிருக்காது. அப்பேர்ப்பட்ட ஒரு சமூக நிலையை அமெரிக்கா நிராகரிக்கிறது. மனிதர்கள் தம்முடைய சொந்த வீடுகளையும் நாட்டையும் மட்டுமல்ல, தங்கள் மதமும் அரசியலும், நாகரீகமுமே நிர்மாணம் செய்யப்பட்ட அடைப்படைகளான கொள்கைகளையும் தர்மத்தையும் உயிர் கொடுத்தும் காப்பாற்றவேண்டிய தருணங்களும் உண்டு. ஏதாவது ஒன்றை நாம் காக்க வேண்டுமென்றாலும் எல்லாவற்றையும் காப்பாற்றியாக வேண்டும்.

இப்பொழுது புதிதாக நடமாடும் பலாத்கார சக்திகள் இதர கண்டங்களை ஆக்கிரமித்துவிட்டு நம் கண்டத்திற்கே வந்தால் என்ன ஆகும்? நல்லவேளையாக, நமது உலகத்தில் அமைதியாக போர் புரியக்கூடிய சக்திகள் ஏராளமாக கைவசம் இருக்கின்றன. நமது பாதி பூமியை எவ்வித ஆபத்திலிருந்தும் காப்பாற்ற நாம் உறுதிகொண்டிருக்கிறோம். இதனால் அமெரிக்கா இதர நாடுகளில் ஈடுபடவில்லை என்று அர்த்தமல்ல. இதர நாடுகளுக்கு எதிரி என்றும் அர்த்தமில்லை.

நமது சரித்திர பூர்வமான வாக்கை நாம் என்றும் நிறைவேற்றத் தயாராக இருக்கிறோம். ஆக்கிரமிப்பு ஒழிவதற்கும் யுத்த தளவாடங்கள் போட்டி நிற்பதற்கும் உலக வியாபாரம் அபிவிருத்தி யாவதற்கும் நாம் என்றும் அன்னியநாடுகளுடன் ஒத்துழைக்கத் தயாராக இருக்கிறோம். ஆனால் இன்று உலகம் சிறுத்துவிட்டது. ஆயுத பலம் பிரமாத மாகிவிட்டது. அதனால் எந்த தேசமும் இன்று நிம்மதியாத இருப்பதற்கில்லை. கடவுள் நம்பிக்கைகொண்ட ஜனநாயகங்கள் ஒப்பந்தங்களைக் கடைபிடிப்பன. ஆகையால் நியாயத்திற்குக் கட்டுப்படாத அநீதியை அவை அனுமதிக்க முடியாது. நல்ல வார்த்தைகளால் ஒன்றும் நடக்காமல் போகலாம். ஆனால் மனித சமூகம் தன் வாக்கிற்கே மதிப்பு கொடுக்க யுத்தமொன்று தான் வழியென்பது அல்ல. அக்கிரமம் செய்கிறவனுக்கு தைரியம் கொடுக்கும் செய்கையோ அல்லது மௌனமோ பிசகு. நமது நடு நிலைமை நியதி சில சமயங்களில் வலியோருக்கு இடம் கொடுத்து எளியவருக்கு ஆபத்தாகலாம். நாம் இனி மேல் அப்படி இருக்கக்கூடாது என்று நமது தற்காப்பு உணர்ச்சியே கூறுகிறது. எப்பொழுதும் தற்காப்புகள் தயாராக இருந்தால் ஆக்கிரமிப்பு பயமும் இல்லை என்பதை அறிந்து கொண்டிருக்கிறோம்.

* * * *

ஜனநாயகத்தை எதிர்ப்பதில் மற்றொரு ஆட்சி முறை ஜகபத்தியத்துடன் வேலை செய்

தால் அதை எதிர்க்க ஜனநாயகம் மட்டும் ஐக பத்தியம் கொள்ளமுடியாதா யென்ன? ஆயுத விஸ்தரிப்பைப்போல ஒரு தேசத்தின் சமூகப் பொருளாதார அபிவிருத்தி திட்டமும் தற்காப்பின் அம்சம் தான். இந்த ஆறு வருஷ விஸ்தரிப்பு திட்டத்தைப்போல அமெரிக்கா வில் என்றுமே இவ்வளவு தீவிரமாக சர்வாதி கார உத்தரவன்னியில், பலாத்காரமான வேலை யன்னியில், வேலை நடந்தது கிடையாது.

ஜனநாயகத்தைத் திறமை கொண்டதாக்கி அமைதியை நிலைநிறுத்தவும் தற்காப்பை சரி வர பலப்படுத்தவும் நாம் இப்பொழுது பிற நாடுகளுடன் பந்தயம் போட்டு வேலை செய் கிறோம். வேலையற்ற மனிதர்களையும் வேலை யற்றுக் கிடக்கும் முதலையும் பிணைத்து வேலை செய்து நாம் சர்வாதிகாரிகளுடன் போட்டி போட முடியும்; நாகரிகத்தின் எல்லைக்குள் ளும் இருக்க முடியும். —தலைவர் ரூஸ்வெல்ட்

## சத்தியாக்கிரகம்

சத்தியாக்கிரகம் யுத்தத்திற்கு மாற்றல்ல; அது யுத்தமே தான். யுத்தத்தின் கோரமான அங்கங்கள் அதற்கில்லை; சம்ஹாரம் அதன் நோக்கமல்ல. அது மகா தைரியமான யுத்த முறை.

உலகம் ஒன்று என்பதும் எல்லோரையும் ஒரே மாதிரி நேசிப்பதும் தான் சத்தியாக் கிரகியின் முதல் கோட்பாடு. எந்த மாதிரி யான சுரண்டலிலும் அன்பு இருக்க முடி யாது. என்பது அவன் தீர்மானம். தனி உடைமை உணர்ச்சியும் அன்பும் ஒன்றாக இருக்க முடியாது.


எதிரியை வெல்லுவது மூளையால் அல்ல, ஹிருதயத்தால் தான் என்பது அவனுடைய இரண்டாவது கோட்பாடு. அதற்கு வழி ஆத்ம தியாகமும் பொறுமையாக கஷ்டம் அனுபவிப்பதும் தான். அந்த சகிப்பு அன் பால் பெருகவேண்டும்; வெறும் நியதியாக இருக்கக்கூடாது.

அனுஷ்டிப்பவனையும் அவன் எதிரியை யும் கிருதார்த்தனுக்குகிறது சத்தியாக்கிரகம்.

சத்தியாக்கிரகி தன்னைத்தானே பரிசுத்தம் செய்துகொள்ளுகிறான்; எதிரி அவன் கஷ்டங் களைக் கண்டு உணர்ச்சி பெறுகிறான்.

வாளை ஏந்துகிறவன் வாளால் மாய்கிறான் என்பது காந்திஜியின் மதம் கூடத்தான். அஹிம்ஸை மூலமாகத்தான் பலாத்காரத்தை வெல்லவேண்டும்; அன்பைக்கொண்டு தான் பகையை அடக்க வேண்டும்.

—நிர்மல குமார வஸு

மௌனமாக கஷ்டப்படுபவர்கள்!

பலஹீனம் ஏற்பட்டதன் காரணம் அநேகருக்குத் தெரியாமலிருக்கலாம். சிலருக்குத் தெரிந்தும், வைத்தியர் களிடம் கூறாமல் இருந்துவிடுகின்றனர். காரணம், சங்கோஜம்தான்—எப்படி யாயினும் அவர்களுக்கு இது ஓர் வரப் பிரஸாதம்.

ஜீவாம்ருதம்

பலஹீனத்திற்குக்காரணம் எதுவாயி னும் அதைப்போக்கும். பூரா தேகத் தையும் சுத்தி செய்து, புதிய ஆரோக் யம், ஜீவசக்தி இவற்றைக்கொடுக்கும்.

தாமதிக்காமல்
இன்றே பரீக்ஷித்துப்பாருங்கள்.

எல்லா மருந்து வியாபாரிகளிடமும் கிடைக்கும்.

ஆயுர்வேதாஸ்ரமம்,
த. பெ. 287, மதராஸ்.

வினியோகிப்பவர்கள்:—
அமர்சந்த் சோபாசந்த், மதராஸ்.

## கிருஷிகர் ஸ்தாபனம்

தமிழ் நாட்டிலே கிருஷிகர் ஸ்தாபனங்கள் விசேஷமாக இல்லை என்ற பேச்சுக்கு இனி இடமில்லை. தொழிற் சங்கங்கள் எவ்வாறு தமிழ்நாட்டிலும் உதித்து வளர்ந்து பலமடைந்து வருகின்றனவோ, அவ்வாறே தமிழ் நாட்டில் கிருஷிகர் ஸ்தாபனங்கள் ஏற்பட்டு வருவதையே கிருஷிகர் மகாநாடு காட்டுகின்றது. கிருஷிகர்களுக்கும், தொழிலாளிகளுக்கும் தங்கள் குறைகளைத் தீர்க்க தங்கள் வர்க்க ஸ்தாபனம் வேண்டுமென்பது, அவர்கள் சரித்திரப் போக்கில் உணர்ந்து வருகின்றனர். காங்கிரஸுக்கும் இந்த ஸ்தாபனங்களுக்கும் ஒரு விதமான போட்டியும் கிடையாது. காங்கிரஸ்காரர்கள் இந்த ஸ்தாபனங்களில் உழைத்து, அவற்றை வளர்ப்பது மிகவும் அவசியம் என்றே ராஷ்டிரபதி போஸ் தமது வாழ்த்துச் செய்தியில் கூறியிருக்கிறார். கிருஷிகர் மகாநாட்டில் நிறைவேறிய தீர்மானங்கள், முக்கால் பங்குக்கு மேற்பட்டவர்களின் சில முக்கிய குறைகளை எடுத்துரைக்கின்றன. நமது மந்திரி சபை இந்த ஸ்தாபனங்களின் மூலம் மக்கள் குறைகளைக் காது கொடுத்துக் கேட்டு, அவற்றை அறிந்து தீர்க்கவேண்டும். கிஸான் ஸ்தாபனங்களும் தமிழ்நாட்டில் சிறந்து விளங்கும். ஸோஷியலிஸ்ட் மகாநாடு, பரவிவரும் ஸோஷியலிஸ்ட் தத்வத்தையும், அது அளிக்கும் உணர்ச்சியையும், காட்டும் நேர் வழியையும் குறிக்கின்றது. இம்மகாநாட்டின் தீர்மானங்களை மற்றொரு பக்கத்தில் பிரசுரித்திருக்கின்றோம். அத் தீர்மானங்களிலிருந்து ஸோஷியலிஸ்டுகளின் தீவிரமும், உறுதியும், மேலான கொள்கைகளும், களங்கமற்ற மனப்பான்மையும், யாவர்க்கும் விளங்கும். "ஸோஷியலிஸ்டுகள் எக்காலத்திலும், எந்நேரத்திலும், மிக முற்போக்கானவர்கள். அவர்கள் எந்நிலையிலும் பொதுவாக மக்களின் பெரும்பான்மையோரது நலத்தையே குறித்து, அதற்கு அல்லும் பகலும் சலியாது உழைக்கின்றனர்" என்பது விளங்கும்.

தமிழ்நாட்டு மக்கள் காங்கிரஸினுள் காணப்படும் ஒருவித பார்லிமெண்டரி போக்கை நிறுத்தி, தலைக்கு வால் வழி காட்டுவதை ஒழித்து, வாலுக்குத் தலை வழி காட்டுமாறு செய்ய எங்கும் தீவிரப் பணியாளர்களைத் தேர்ந்தெடுத்துக் காங்கிரஸ் ஸ்தாபனத்தையும், அதன் முற்போக்கையும் பாதுகாத்துக்கொள்ள வேண்டும். அவ் வேலையை நிறைவேற்ற நமது தோழர்களும் தமது சலியா உழைப்பை எங்கும் எடுத்துக் காட்ட முன்வருவார்களாக. —ஜனசக்தி


### தயாராகி விட்டது!

பிரபலமான கதை

**ம து ரை வீ ர ன்**

தமிழ் நாட்டிலே புகழ்பெற்ற நடிகர்கள்

டி. பி. ராஜலக்ஷ்மி

வி. ஏ. செல்லப்பா

உள்ளங்களைத் தூக்கிக் குதிக்க வைக்கும் பாட்டுகள் ஒரு ஸ்பெஷல்

வெகு சீக்கிரத்தில் மதுரை, காரைக்குடி, திருநெல்வேலி, கோயமுத்தூர், கும்பகோணம், திருவனந்தபுரம் முதலிய இடங்களில் வருகிறது.

விபரங்களுக்கு :

ராஜா பிலிம்ஸ் லிமிடெட்,

142, பூந்தமல்லி ஹைரோட், கீழ்ப்பாக்கம், சென்னை.

'மதுரை வீரன்' பாடல்களை ஓடியன் பிளேட்டுகளில் கேளுங்கள்.

## துணுக்குகள்

### பல் தேய்க்கும் பிரஷ்கள்

1937–38-ம் வருஷத்தில் இந்தியாவில் இருக்கும் ஐரோப்பிய சோல்ஜர்களுக்காக 411000 பல் தேய்க்கும் பிரஷ்கள் இங்கிலாந்திலிருந்து வாங்கப்பட்டனவாம்! 1936–37-ம் வருஷத்தைக்காட்டிலும் இந்தத் தொகை 106,000 அதிகமாம்.

இங்கிலாந்திலிருந்து 968,000 கஜம் கொசு வலையும் இந்தியாவிலிருந்து 65,000 கஜம் கொசு வலையும் வாங்கப்பட்டது. 206,511 ஜதை பட்டிகளில் 22,779 ஜதை பிரிட்டனிலிருந்து வரவழைக்கப்பட்டன. 106,000 கஜம் அல்கோரச் ஷர்ட்டிங் துணியும் 118,390 கம்பிளி சட்டைகளும் கூட வாங்கப்பட்டன.

### புழு வகைகள்

இந்தியாவில் 2,500,000 வகை புழுக்கள் இருக்கின்றனவாம்! அவைகளால் பொருள் நஷ்டம் 200,000,000 பவுன் உயிர் நஷ்டம் 1500,000. மலேரியாப் புழுக்களாலேயே வருஷா வருஷம் 1000000 பேர் சாகிறார்கள்!

### புராதன ஆஸ்பத்திரிகள்

500 கி. மு. வில் இந்தியாவில் மிருக வைத்திய சாலைகள் இருந்ததாகத் தெரிகிறது. பிரிட்டிஷ் மியூஸியத்திலிருக்கும் பௌத்த கிரந்தங்களிலிருந்து குதிரைகளுக்கும், இதர மிருகங்களும் வைத்திய சாலைகள் இருந்தது தெரிகிறது.

* * *

### கடன் நிவாரண சட்டத்தின் பலன்

கடன் நிவாரணச் சட்டத்தின்கீழ் ஆறு மாத காலங்களில் கோர்ட்டுகள் மூலியமாக ஏற்பட்ட பலன்களையெல்லாம் தொகுத்து சென்னை சர்க்கார் புள்ளி விவரம் கொடுத்திருக்கிறார்கள்.

ஆகஸ்ட்டு மாதத்துடன் முடிவடையும் அரை வருஷத்தில் மொத்தத்தில் ரூ.40,44,609-9-3 சட்டப்படி குறைக்கப்பட்டு கடன்காரர்களுக்குச் சேரவேண்டியதென்று தீர்ப்பு கூறப்பட்ட தொகை. மொத்தம் தாவாவிலிருந்த தொகை ரூ. 76,09,788-6-3. ஆகவே வஜா ஆன தொகை ரூ. 35,65,178-13-0. அதாவது மொத்தத் தொகையில் 47 சதவிகிதம் குறைக்கப்பட்டிருக்கிறது.

இந்த மாதிரி பைசலான கேசுகள் மொத்தம் 36,005. தாக்கலானவைகளில் பைசலாகாமல் பாக்கியிருக்கும் கேசுகள் 19,000.


## நமது புத்தக சாலை

| | ரூ. | அ. |
|---|---|---|
| இரட்டை மனிதன் (ஸ்ரீ கு. ப. ராஜகோபாலன் பி.ஏ. மொழி பெயர்ப்பு) | 0 | 8 |
| விஷ விருக்ஷம் (ஸ்ரீ டி. என். குமாரஸ்வாமி பி.ஏ. மொழி பெயர்ப்பு) | 1 | 8 |
| துர்க்கேச நந்தினி (ஸ்ரீ கு. ப. ராஜகோபாலன் பி.ஏ. மொழி பெயர்ப்பு) | 1 | 4 |
| எல்லோரும் ஓர் குலம் (ஸ்ரீ ப. ராமஸ்வாமி) | 0 | 8 |
| முருகன் ஓர் உழவன் (ஸ்ரீமதி கிருஷ்ணகுமாரி மொழி பெயர்ப்பு) | 1 | 8 |
| தேசபக்தன் கந்தன் (ஸ்ரீ கே. எஸ். வெங்கடரமணி எம்.ஏ., பி.எல்.) | 1 | 0 |
| ஜேக்கோஸ்லோவேகியா (ஸ்ரீ வெ. சாமிநாத சர்மா) | 1 | 0 |
| மாகாண சுயாட்சி (ஸ்ரீ ஏ. என். சிவராமன்) | 0 | 8 |
| ஆண்டு நிறைவு (வ. ரா.) | 0 | 2 |
| ஹிட்லர் (ஸ்ரீ வே. சாமிநாத சர்மா) | 2 | 4 |
| கண்ணன் என் கவி (ஸ்ரீமான்கள் கு. ப. ராஜகோபாலன் & பெ. கோ. சுந்தரராஜன்) | 0 | 6 |
| சந்தணக்காவடி (ஸ்ரீ. தி. ஜ. ர.) | 0 | 8 |

**சுவேதாரண்ய ஆச்ரமம்,**

7, வடக்கு மாட வீதி, மைலாப்பூர்,

சென்னை.

கோர்ட்டுக்குப் போகாமல் கட்சிக்காரர்களுக்குள்ளேயே சமரஸமாகிப் பைசலான கேசுகள் இந்தக் கணக்கில் வரவில்லை.

## மைசூரில் பஞ்சாயத்து நிர்வாகம்

மைசூர் சமஸ்தானத்தில் மொத்தம் 11843 கிராமப் பஞ்ஞாயத்துகள் இருக்கின்றன. தண்ணீர் வசதிக்காக அந்தப் பஞ்சாயத்துகளுக்கு அரசாங்கம் ரூ. 1,85,000 மானியம் அளித்தார்கள்; இதா அபிவிருத்திகளுக்காக ரூ. 80,000 கொடுத்துதவினுர்கள். மொத்தத்தில் கிணறு முதலிய வசதிகளுக்காக பஞ்சாயத்துகள் இந்த வருஷத்தில் ரூ. 2,76,205 செலவழித்தன.

பொதுவில் வாரத்திற்கொருமுறை வேலை செய்வதென்ற வழக்கம் அநேக பஞ்சாயத்துகளில் இருக்கின்றன. அந்த மாதிரி நடைபெற்ற வேலையின் மதிப்பு ரூ. 1,80,000.

33 பஞ்சாயத்துகளில் பிரசவ ஆஸ்பத்திரிகள் இருக்கின்றன. 126 பஞ்சாயத்துகளில் மின்சார வசதிகள் இருக்கின்றன. விவசாயம், கைத்தொழில் வேலைகளுக்குக்கூட மின்சார சக்தி சில இடங்களில் உபயோகப்பட்டது.

193 கிராமங்களில் சுகாதாரப் பிரசாரம் நடந்தது. பழ விருக்ஷங்கள் முதலிய உபயோகமுள்ள மரங்களை சாலையோரங்களிலும் பார்க்குகளிலும் விருத்தி செய்யப் பிரயத்தினங்கள் நடக்கின்றன.

## ஜெக்கோ ஸ்லோவேகியா

ஜெக்கோ ஸ்லோவேகியாவின் மொத்த விஸ்தீரணம் 54,000 சதுரமைலில் சென்னை ராஜதானியில் ஐந்தில் இரண்டு பங்கு. 1938-ம் வருஷத்து ஜனத் தொகைக் கணக்கின்படி மொத்த ஜனத்தொகை 15,5,00,000.

ஜெர்மனி அதைவிட நான்கு மடங்கு விஸ்தீர்ணமுடையது. ஜனத் தொகை ஐந்து பங்கு.

## பி. இ. என்.

பி. இ. என். என்பது உலகளாவிய ஒரு இலக்கிய சங்கம், அதில் உலகத்தின் எல்லா பாகங்களிலுமுள்ள பிரபல எழுத்தாளர்கள் அங்கத்தினர்களாக இருக்கிறுர்கள்.

அதனுடைய 1940-ம் வருஷத்துக் கூட்டம் மைசூரில் நடைபெறப் போகிறது.

---

## வரப்பெற்றோம்

மாடல் பிரபந்த டைரி, ஹோ & கோ டைரி, வி. எச். ஆர். காலண்டர், வெங்கட்டராமா & கோ காலெண்டர், எம். எஸ். மணியம் காலெண்டர் இவைகள் கிடைக்கப் பெற்றோம்.


# பாரத மணி

**சந்தா**

| | | |
|---|---|---|
| உள்நாடு | ரூ. 3 | (தபால் செலவு உள்பட) |
| வெளிநாடு | ரூ. 5 | (தபால் செலவு உள்பட) |

தனிப்பிரதி விலை 1 அணு.

**விளம்பரம்**

இந்தியாவில் செய்யப்பட்ட சுதேசி சாமான்கள் விளம்பரப் படுத்த விசேஷ வசதி அளித்திருக்கிறது. ⅛ பக்கம் (பத்து வரி) விளம்பரங்கள் ஒரு தடவைக்கு ரூ. 2 வீதமாக ஏற்றுக்கொள்ளப்படும்.

நீடித்த ஒப்பந்த விபரங்களுக்கு எழுதித் தெரிந்துகொள்ளவும்.

**மானேஜர்.**